அன்பு அறிவு அமைதியோடு
இருந்திடுவோம் எல்லோரும்

# சிரித்திரன்

கலை, இலக்கிய, சமூக ஏடு

மலர் - 4 - 1998 ஆடி - ஆவணி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அச்சியந்திர சாலைகளே !
அறிவுக் கல்விச்சோலைகளே !
அற்புதக் கற்பகதருவொன்று - மலிவாய்
அத்தனையும் அள்ளித்தரும் யாழ்நகரில் !

**காகிதாதிகள்,**
**அப்பியாசக் கொப்பிகள்,**
**அச்சுக்கூட மை வகைகள்,**
**சகலவிதமான உபகரணங்கள்**
**இன்னும் ...**

# புஸ்பா அன் கோ.

198, (404A) மருத்துவமனை வீதி,
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எங்களது பட்டங்கள்!

த. ஜெயபாலன்

முந்தநாள் எந்தன் முப்பாட்டன்
இதே இடத்தில்
பட்டங்கள் கட்டிப் பறக்கவிட்ட
அதே சமயம்
எங்கோ ஒருவன்
சந்திரனில் மண்ணெடுத்தான்!
நேற்றெந்தன் அப்பர்...
இதே இடத்தில் நின்றபடி
எட்டுமூலை ஏற்றி மிடுக்கடைந்த
அதே நேரம்
மேற்கு ஊரான் அணுக்குண்டின்
அடிமுடியை அறிந்து கொண்டான்!
இன்றும் இதே இடத்தில்
நான் நின்று பட்டமேற்றி
விண்கதற...;
மீசையினை முறுக்கையிலும்
வெளிநாட்டான்
செவ்வாய்க்குப் போகச்
சீர்வரிசை சேர்க்கின்றான்!

ஆடிக் காற்றெல்லோ...
அசலாயென் எட்டுமூலை
ஏறிச் சிரிக்கிறது;
எனைப்பார்த்தா சிரிக்கிறது?
'என்நடப்போ' இன்று மிகப்பெரிது.
எனைச் சுற்றி
என்னை இரசித்தபடி;
என்பின் என் வாரிசுகள்
சின்னக் கொடிகட்டித் திரண்டுளன!
வெறும் பட்டம்
ஏற்றும் மகிழ்வுடனே
எனைப்பார்த்து வியந்துளன!
நாளையும் இவற்றிலொன்று
நல்ல பட்டம் கட்டி ஏற்றும்!
ஆனால் 'இவற்றில்' எது
எமை உலகுக்கு அறிவிக்கும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தரன்

கலை, இலக்கிய, சமூக
மாதாந்த ஏடு.

252, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

இதழ் 4
15 – 07 – 1998

நெறியாள்கை:
சொக்கன்
சிவராமலிங்கம்
செங்கை ஆழியான்

ஓவியம்:
ரமணி

இணை ஆசிரியர்:
த. ஜெயசீலன்

ஆசிரியர்:
கௌதமன்

வெளியீடு:

போஸ்கோ பதிப்பகம்
252, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

விலை: 15-


## பாவங்கள்

நரம்பு மண்டலத்தின்
நீட்சியென
மாயப்பெட்டி

எல்லாம் திறந்தது...
கனவுகளின் உற்பத்தி மட்டும்
பெருகியது!

காய்ந்த மாடு
கம்பில் வீழ்ந்த
கதையானது...

சூழ
'என்னதான் நடக்கும்
நடக்கட்டுமே'
'கறன்ற் கட்'
வேளை மட்டும்
கனவு தடைப்பட
குறு விழிப்பு
பாவம் தேசம்;
பிரஜைகளும் தான்.

சண்முகபாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேடிக்கை மனிதரைப் போல!

பக்கத்து வீட்டு அம்மாள்
பட்டினியில் தவிப்பாள்
நாமோ
கோயில் கட்டுவோம்
கும்பாபிஷேகம் செய்வோம்
பழங்களும்
பணியாரங்களும்
படைத்து மகிழ்வோம்!

அருகு குடிசை யொன்றில்
ஆற்றா நோயால்
அப்பன் ஒருவன்
அவதிப்படுவான் - நாம்
பாட்டுப்பாடி - கும்மாளமிட்டுக்
குதித்து மகிழ்வோம்!

தன் பெண்பிள்ளைகள் மூன்றையும்
தண்ணியில் தள்ளி
தவிதவிக்க கொன்றுவிட்டு
தன்னையும் மாய்த்துக் கொண்ட
அப்பனொருவனைத் தந்தது
நம் நாகரீகம்!

இறைவன் வாழும்
சின்னக் குழந்தைக்கு
தின்னச் சோறில்லை!
பசிகாக்க முடியாமல்
குழந்தை உயிர்போக்கி
தானும் மாண்டு போகும்
அம்மாக்கள் காலிடற
கடந்து சென்று,

குழந்தை இறைவனுக்கு
குடம் குடமாய்ப் பாலூற்றி - அது
வாய்க்கால் வழிகிடந்து
புழுப்பிடிக்க
உச்சி தொட்டு; நாதடவி
பூரித்துப் போகும்
புழுத்துப்போன
புண்ணிய பைத்தியங்களை
பொறுக்கித் தந்தது
நமது கலாச்சாரம்!

உண்மை வெறும்
சேறும் சகதியுமாய்
நாறிக் கிடக்க!
கலாச்சாரக் கூத்துக்களால்
நாடகமேடையில்
வேசமிட்டு மறைப்பது
கோமாளித்தனமல்லவா?

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு
முன்தோன்றியவர்கள் நாம்
எல்லாமே இன்று மாறிவிட்டது;
நாம் மட்டும்,
அன்று தோன்றிய கல்லாகவே
இன்று வரை கிடக்கின்றோம்!

ஆளுக்கொரு கடவுள்கள்
அத்தனையையும் காப்பாற்ற
ஆயிரம் சங்கங்கள்;
உண்டியல் சண்டைகளில்
உடைந்து போகும் கடவுள்கள்.

செத்த பிணத்திற்கும்
சங்கமமைப்பீர்!
மனித நேசம் வளர்க்கவொரு
சங்கமேன் வைக்கவில்லை?
உண்டியலெதுவும் இல்லாததாலோ?

• • •

சுற்றி வரும் சூரியனையும்
சுட்டு விடும் விரல்களே
பற்றி எரியும்பசி தாங்காமல்
உயிர் போக்கும்
கலாச்சாரம் எரிப்போம்!
வாழ்வை மறுக்கும்
முற்றிய நோயையும் முதுமையையும்
மன, உடல்தாழ்வையும்
பற்றியணைத்து
பாசவுரமிடுவோம்!
புத்துயிர் கொடுத்து
புதுவாழ் வழிப்போம்!
வாழ்வு,
செத்துப்போக விடலாமோ
சிரஞ்சீவியாக்கிடுவோம்! □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொட்டில்

அப்புவின் கண்கள் அந்தக் கொட்டில் இருந்த இடத்தில் நிலைகுத்தியிருந் தன. முன்பு அது இருந்த இடத்தில் மண்மேடு .. சுடலைப் பிட்டிபோல...

'அப்பு' என்று அழைக்கப்படும் அப்புத்துரை, அறுபத்தைந்து வயதைக் கடந்தவர். தமக்குச் சீதனமாக வந்த வீட்டின்முன் தமது இருபத் தைந்தாவது வயதில் அந்தக் கொட்டிலைச் சிற்றாள் ஒருவனின் துணையோடு தமது கையா லேயே போட்டவர் அவர்.

இயல்பாகவே வலுவான உடல்... தோட் டத்தைக் கொத்திக் கொத்தி வைரம் பாய்ந்த கைகள். எதையும் சாதிக்கத் துடிக்கும் இளமை வேகம்.

அப்பு தாமே தனித்து மரங்களைத் தூக்கிக் கூரைபோட்டபோது அவரது இளம் மனைவி கமலம் கிலியுடன் பிரமித்துப் பார்த்துக்கொண் டிருந்தது, இன்னும் அவர் மனக்கண்ணில் நிழல் ஆடுகிறது.

செவ்வக வடிவில் அமைந்த ஒற்றைக்கூரைக் கொட்டில் அது. அதனைச் சுற்றி மண்ணால் அரைச்சுவர் எழுப்பி வாசலின் இருபக்கங்களி லும் நேர்த்தியான திண்ணை போட்டிருந்தார்; திண்ணையின் முகப்பில் சங்குகள் இரண்டைப் பதித்து அழகு செய்தார்.

தலைசிறந்த தச்சன், மேசன்களுக்கே உரிய தொழில்திறனும் ஒரு கலைஞனுக்கேயுரிய செய்நேர்த்தியும் அழகும் அக்கொட்டிலில் மிளிர்ந்தன. வஞ்சகமில்லாத கூலியாளின் வியர்வை சிந்தும் உழைப்பு அக்கொட்டிலின் ஒவ்வோர் அணுவிலும் செறிந்திருந்தது.

மொத்தத்தில் அப்புவின் அழகுக் கனவின் உயர்ந்த வடிவமாகவே கொட்டில் காட்சி தந்தது.

அந்தக் கொட்டிலிலேயே அப்புவின் பெரும் பொழுது கழிந்தது.

அதிகாலையில் எழுந்து தோட்ட வேலை களை முடித்து வந்தவுடன் கொட்டிலில் அமர்ந்து கொள்வார். கமலம் அங்கேயே காலைச் சாப் பாட்டைக் கொண்டுவந்து விடுவாள். பத்து மணியளவில் சுருட்டுச் சுற்றும் இரண்டு பிள்ளை கள் வருவார்கள். அவர்களோடு இணைந்து தாமும் சுருட்டுச் சுற்றுவார். இந்தவேலை பிற்பகல் இரண்டு மணிவரை தொடரும். அதற்குப்பின் மதியச் சாப்பாடும் கமலத்தால் அவ்விடத்துக்கே கொண்டுவரப்பட்டுவிடும்.

அப்புவுக்குச் சைவபோசனம், கமலத்துக்கு மச்சமில்லாவிட்டால் சாப்பாடு இறங்காது. இதனால் இரண்டு சமையல் செய்யும் அவஸ்தை அவளுக்கு. கணவன் முகம் சுழிக்காமலும், ஆசாரம் தவறாமலும் சாப்பிடக் கொட்டில் வசதியாகப் போயிற்று.

நான்கு மணியளவில் அப்புவின் நண்பர்கள் வருவார்கள். தேநீர்க்கடை விரிக்கப்படும். வம்பர்மகாசபை ஆரம்பமாகும். உலகத்து வம்புகள் கொட்டிலின் மூலை முடுக்குகள் எங்கும் எதிரொலிக்கும். அப்புவும் அவர் நண் பர்களும் விடுகின்ற சுருட்டின் புகை கொட்டி லைச் சூழ்ந்து மூட்டம் போடும்.

வெளியில் சென்றுவரும் அப்புவுடன் இரவு வேளைகளில் நிலா வெளிச்சத்தில் கொட்டிலில் இருந்து கதைப்பது கமலத்துக்கு இன்பமாகவே இருந்தது. இரவுச் சாப்பாட்டில் மச்சம் சேர்க் கும் வழக்கம் கமலத்துக்கு இல்லை. கொட்டி லிலேயே இரண்டு பேருடைய உணவும் முடிந்து விடும். நேரம் பத்தைத் தொடும்பொழுதே கொட்டிலை விட்டு இருவரும் நகர்வார்கள்.

விடிந்ததும் அப்புவின் முதல் தரிசனம் அந்தக் கொட்டில்தான்.

''எப்போதோ பிரிஞ்சுபோன பிள்ளையைக் கனகாலத்துக்குப் பிறகு கண்டதுபோல வாஞ் சையோட பாக்கிறியள்'' என்ற மனைவியின் கேலி, அவரை அர்த்தபுஷ்டியுடன் புன்னகைக்க வைக்கும்.

● ●

அப்புவின் பிள்ளைகள் வளர்ந்து விட்டார் கள். கமலத்துக்கு இயலவில்லை வாதப்பிடிப்பு, முதுமையின் சாயல்கள் அவளில் படியத்தொடங் கிவிட்டன. குனிந்து வளைந்து வேலை செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- வாசுகி -

சிறுகதை

முடிவதில்லை. இப்பொழுது கொட்டிலைப் பராமரிக்கும் வேலை மூத்தமகள் ரமணியையே வந்தடைந்தது.

வெள்ளிக்கிழமைதோறும் கொட்டிலைச் சாணகத்தால் மெழுகுவதென்பது முதுகை ஒடிக்கும் வேலைதான். ஆனால் பஞ்சி அலுப் பென்று மெழுகாமல் விடமுடியாது. அப்பு ரௌத்திர தாண்டவம் ஆடுவார். தானே சாணகத்தை எடுத்துக்கொண்டு மெழுகப் புறப் பட்டுவிடுவார்.

காலம் உருண்டோடியபோது அப்புவின் ஐந்து குழந்தைகளும் நடைபயிலக் கொட்டிலின் மண்சுவர்தான் உதவியது... அயலில் உள்ள உறவினர்களும் தங்கள் குழந்தைகளை நடை பயில அங்கு அனுப்பிவைப்பதுண்டு—

குழந்தைகளின் ஆட்டபாட்டமும் மழலை யும் கொட்டிலை நிறைக்கும் வேளைகளில், இனம் புரியாத இன்பத்தில் திளைப்பார் அப்பு.

● ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமணி பொறுமைசாலி... ஓ. எல்லுக்குப் பிறகு படிப்பில் ஆர்வம் இல்லாததால் படிப்பை நிறுத்திவிட்டவள்.

அப்புவின் மூத்தபிள்ளைதான் அந்தக் கொட்டில் என்பது அவளுக்குத் தெரியும்.

''அப்பு... உங்கட மூத்தபிள்ளையிண்ட கால் ஒண்டு முறிஞ்சு கிடக்கு. சரி பாருங்கோ'' என்றவகையில் அவளே முறிவு ஒடிவுகளைச் சுட்டிக்காட்டி நகைப்பதுண்டு.

ஆனால் ரமணியின் திருமணத்துக்குப்பின் கொட்டிலை மெழுகுவது யார் என்பதில் பிரச்சினை தொடங்கியது.

கடைக்குட்டி சாந்தி... நவநாகரிக மேட்டிமைக்காரி. எதிர்காலத்தில் தனக்குச் சீதனமாகப்போகும் வீட்டின் பிரமாண்டமும் அழகும் அவளுக்குப் பெருமிதத்தை அளித்தன. அந்த வீட்டுக்குக் கண்ணூறு போல... வீட்டு முற்றத்தில் அந்தக் கொட்டில்... அதில் அவளுக்கு அருவருப்பும் வெறுப்பும்... பனையோலையால் வேயப்பட்ட கொட்டிலைப் பார்க்கும் பொழுதெல்லாம் அவள்முகம் பலகோணங்களாவது வழக்கமாயிருந்தது.

இதனால் சாந்தி கொட்டிலை மெழுகத் தீர்மானமாக மறுத்துவிட்டாள். ஒருநாள்... ''உங்களுக்குக் கொட்டில் வேணுமிண்டா இதைப் பிடுங்கிக்கொண்டுபோய் அடிவளவுக்க போடுங்கோ'' என்று முகத்தில் அடித்ததுபோலக் கூறினாள்.

''ஓம் பிள்ளை, இண்டைக்குக் கொட்டில் பழசெண்டு மூலையில போடச் சொல்லுவியள். நாளைக்கு நானும் கொம்மாவும் பழசுகள் எண்டு எங்களையும் மூலைக்க தள்ளிப் போடுவியள்'' என்று விரக்தியுடன் பதில் சொன்ன அப்பு அன்றுமுதல் தாமே கொட்டில் தரையை மெழுகத் தொடங்கிவிட்டார். அந்த வேளைகளில் அவருக்கு ஒரு குழந்தையை ஸ்பரிசிப்பது போன்ற இன்பம் கிட்டியது.

அப்புவின் பிடிவாதத்துக்கு ஒருபடி மேலேயே சாந்தியின் பிடிவாதம் இருந்தது. அப்புவின் இச்செயல் அவளது மனதை இளக வைப்பதற்குப் பதில் வைரிக்கவே செய்தது. கொட்டில் மீதான வெறுப்பு நாளுக்குநாள் அதிகரித்து வந்தது.

அவள் பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது அவளது தோழிகள் வீட்டுக்கு அடிக்கடி வந்து போவார்கள். அவர்களது பார்வை நவநாகரீகத்துக்கு ஒவ்வாத கொட்டிலின்மீது ஏளனத்துடன் சென்று படிவது வழக்கம்... அப்பார்வையின் இலக்குப் பலவேளைகளில் சாய்மனைக் கதிரையில் வெற்றிலை போட்டுக் குதப்பிக் கொண்டிருக்கும் அந்தக் காலத்து அப்புவை நோக்கியும் திரும்புவதுண்டு.

அவ்வேளைகளில் சாந்தி வேதனையுடன் பெருமூச்சு விடுவாள்...

அவள் கொட்டிலைப் பிடுங்குமாறு அப்புவை நச்சரிப்பதும்... ஆனால்...

''சுருட்டுச் சுற்ற வேறு கொட்டில் போட வேணுமே, அது சில ஆயிரங்களை விழுங்கி விடுமே'' என்று கூறி அப்பு மறுப்பதும் நாள் தவறாத நிகழ்வுகளாயின. ஆனால் பொம்மரும் ஷெல்களும் வீடுகளை நொருக்கத் தொடங்கிய பின்பு கொட்டில் பற்றித் தனது கடுமையான விமர்சனத்தை வெளிப்படுத்தச் சாந்தியால் முடியவில்லை.

● ●

காலத்தின் கோலம்! வலிகாம மக்கள் இடம்பெயர்ந்து தென்மராட்சியிலும், வடமராட்சியிலும் தஞ்சம்புக நேர்ந்தபோது அவ்வாறு வந்தவர்கள் பலருக்கு அப்புவின் வீடு அடைக்கலம் அளிக்கத் தவறவில்லை.

சாந்தியின் பல்கலைக்கழகத் தோழி சுமதி தன் பெற்றோர், உடன்பிறப்புக்களோடு சாந்தியின் வீட்டைத் தேடிவந்தபோது, வீடு நிரம்பியிருந்தது. அப்புவின் கொட்டிலையே அவளுக்கு வழங்கவேண்டியதாயிற்று.

அப்பு தமது பெரிய வீட்டிலே, யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்த அறுபது பேர்களில் ஒருவரானார். சாமி அறை மட்டுமே அவர் குடும்பத்துக்கென்றாயிற்று.

---

ஒருவர்:- கந்தையா உந்த மப்பிலை போறார் என்ன கிபிர் அடிச்சிட்டாரோ...?

மற்றவர்:- முந்தி வந்த கிபிர் மனிசு உயிர்களைத்தான் கொன்றழிச்சுது. ஆனால் இந்தக் கிபிர் எதிர்கால சந்ததியையும் கொல்லும்!

எஸ். மணிவண்ணன்
பருத்தித்துறை.

(கிபிர் - கசிப்பு)

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றோட்டமான கொட்டில் இல்லாமல் சனப்புழுக்கத்திலும், காற்று அதிகம் புகாத அறையின் வெக்கையிலும் அப்பு வெந்துபோனது உண்மைதான். ஆனால் எல்லாவற்றுக்கும் மேலாகத் தம் உயிரோடு கலந்த கொட்டில், ஓர் உயிர்ப்பொருளாகவே எண்ணிப் பழகிய கொட்டில் ஒரு குடும்பத்துக்கு வாழ்விடமானதில் அவருக்கு எல்லையற்ற மகிழ்ச்சி...

ஆனால், அக்கொட்டில் குமர்ப்பிள்ளைகளோடு கூடிய சுமதி குடும்பத்துக்கு வசதியானதா என்பதில் அவருக்குச் சந்தேகம். கல்வீட்டில் தனியறைகளில் வாழ்ந்து பழகிய சுமதிக்கும் அவள் சகோதரிகளுக்கும் சாக்குகளாலும், ஓலைத்தட்டிகளாலும் மறைக்கப்பட்ட, தனியறை அமைப்பில்லாத அக்கொட்டில் வசதிக் குறைவாகவே இருக்கும் என்பது அவர் கணிப்பு.

சுமதியின் குடும்பம், கொட்டிலில் சில அசௌகரியங்கள் இருந்தாலும் காற்றுத்தேவனின் பூரண கிருபையால் மகிழ்ச்சியாகவே இருந்தது.

''ஏன் பிள்ளை சுமதி! உங்களுக்கு உந்தக் கொட்டில் வசதிக் குறைவாகத்தான் இருக்கும். வேற வசதிசெய்து தரவும் முடியேல்ல'' அப்புவின் ஆதங்கம்.

''இல்லை அப்பு, இந்தக் கொட்டில் பெரிய மாளிகை மாதிரிக் கிடக்கு. உங்கட உதவியை நாங்கள் ஒருநாளும் மறக்கமாட்டம்''.

இவை சுமதியின் மன ஆழத்தில் இருந்து வந்த உண்மையான வார்த்தைகள்...

அவை அவர் வருத்தத்தை ஆற்றி ஒரு வகைத் திருப்தியைத் தந்தன.

● ●

இடம் பெயர்ந்தவர்கள் ஊருக்குத் திரும்பி விட்டார்கள். அப்புவின் கொட்டில் உட்பட வீடே வெறிச்சோடிவிட்டது ஆனால் வெகு விரைவிலேயே அந்த வெறுமையிலிருந்து அப்பு தம்மை ஆசுவாசப்படுத்திக் கொண்டார். பழையபடி அவர் வாழ்க்கை கொட்டிலில் பூத்துக் குலுங்கியது.

புதிய மரங்கள் போட்டு, கூரை வேய்ந்து கொட்டிலை மேலும் செம்மைப்படுத்தினார். தமது கொட்டில் பிள்ளையின் குமரிப்பருவப் பொலிவைக் கண்டுகளிக்கும் பூரிப்பு அவருக்கு.

ஆனால் சாந்தியின் நச்சரிப்பும், தாக்குதல்களும் மீண்டும் புதிய கோணத்தில் தொடங்கிய பொழுது...

சாந்திக்கு மாப்பிள்ளை பார்க்கச் சாதகக் கட்டை எடுத்தபோதுதான், சாந்தியின் காதல் அப்புவுக்குத் தெரியவந்தது. அவளோடு படித்த குமரனுக்கே அவளைக் கட்டிக்கொடுக்கத் தீர்மானமாயிற்று... அப்பு தாமிருந்த வீட்டைச் சீதனமாகக் கொடுத்தபோதும்.. மாப்பிள்ளை வீட்டார் காசாகப் பத்து இலட்சமும் டொனேசனாக ஐந்து இலட்சமும் கேட்டபோது அப்பு திணறித்தான் போய்விட்டார். வெளிநாட்டில் உள்ள அவரது ஆண்பிள்ளைகள் மூவரும் கை கொடுத்ததனால் விஷயம் ஒருமாதிரி ஒப்பேறியது...

அன்று குமரன் சாந்தியைப் பார்க்கவந்தான்... அவனது பார்வை கொட்டிலில் அருவருப்பாய்ப் படிந்தது. கொட்டிலில் வெற்றிலை பாக்கைக் குதப்பிக்கொண்டிருந்த அப்புவின் முகத்திலும் அந்த அருவருப்பின் எச்சில் படாமலில்லை.

''குமரன் நல்ல டீசன்ரான பமிலியில வந்தவர். அவற்றை அப்பா என்சினியர்... அம்மா ரீச்சர்... அவையின்ர வீடு கச்சேரி - நல்லூர் றோட்டில் இருக்கு... வாடகை வீடுதான். ஆனாலும் நல்ல பாஷனான வீடு'' என்று அன்றே பூர்வாங்கத் திட்டத்தோடு சாந்தி அப்புவின் அருகில் வந்தாள்.

''அதுக்கென்ன?'' அப்புவின் கேள்விக்கு நாகபாம்பாய்ச் சீறினாள் சாந்தி.

''இந்த வீட்டுக்கு முன்னாலை அசிங்கமான இந்தக் கொட்டில் வேண்டாமாம். கலியாணத்துக்கு முன்னால் பிடுங்கிப்போடுங்கோ''

''பிடுங்காட்டில் ''

(பரீட்சை மண்டபத்தில்)

ஆசிரியர்:- டேய், ஏன்டா ரகு பின்பக்கம் திரும்பிப் பார்க்கிறாய். இது பரீட்சை மண்டபமெல்லே?

ரகு:- ஓம் சேர், ஆனா ரெஸ்ட் பேப்பரிலை ''பின்பக்கம் பார்க்கவும்'' எண்டு எழுதிக்கிடக்கு. அதுதான் திரும்பிப் பார்த்தனான்.

ஆசிரியர் ?...?...?...?

வி. உதேஸ் - (நாவற்குழி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கலியாணம் நடக்காது... கருமாதிதான் நடக்கும்.''

சாந்தியின் நெஞ்சில் ஒடுங்கியிருந்த அக் கினிக்குஞ்சு, வார்த்தைகளாய்ப் பரந்து அப்பு வைச் சுட்டது.

அப்பு மௌனித்தார்... அந்த மௌனம் அவரின் தோல்விக்கு, சரணாகதிக்கு அறிகுறி!

வேட்டியை இழுத்து மடித்துக் கட்டிக் கொண்டு, கையிலிருந்த சுருட்டை ஒரு ஓரமாக வீசிவிட்டு, தோளில் துவாயை உதறிப்போட்ட படி சிற்றாள் ஒருவனின் உதவியோடு போட்டு முடித்த அந்தக் கொட்டிலை அடுத்தநாள் தனி யாகப் பிரித்துப்போடத் தொடங்கினார் அப்பு.

அவரிடம் இதுவரை காணாத ஒருவேகமும், விரக்தியும் சேர்ந்தே கிடந்தது. கொட்டிலின் ஒவ்வொரு பகுதியையும் பிரித்துப் போடுகையில் அவரது ஒவ்வொரு உறுப்புகளையும் பிடுங்கி எடுப்பதுபோன்ற வேதனையில் துடித்தார்.

உழுதுவிட்ட நிலம்போலக் கிடந்த அப்பு வின் முகத்தில் ஆழமான கண்களிலிருந்து அடிக்கடி நீர் ததும்புவதும், பின் அந்தக் கரடு முரடான முகத்தைவிட்டு கீழே விழுவதற்குமுன் அங்கேயே வற்றிவிடுவதுமாக... முழுத்துன்பத் தினையும் மௌனமாக தன்னுள்ளே விழுங்கி முடித்தார் - அப்பு.

வளைகள், தூண்கள், சலாகைகள் ஒவ் வொன்றாய்த் தனது நெஞ்சில் விழுந்து பெருங் காயத்தை உண்டாக்குவதாய் உணர்ந்தார்.

ஆனால் .....

சாந்தியின் முகத்தில் வெற்றிக்களிப்பு! என்றுமில்லாத பிரகாசம்.

அவள் நான்கைந்து சாடிகளில் பூச்செடி களைக் கொண்டுவந்து கொட்டில் இருந்த இடத்தில் ஒழுங்காக வைத்தாள்.

அப் பூச்சாடிகளின் நடுநாயகமாக கள்ளிச் செடி ஒன்று ஒரு பூச்சாடியில் கம்பீரமாய் வீற்றிருந்தது.

●

### சுதந்திரம்

அறுசுவை உணவு உண்ணக்
கனவுகண்டேன்,
விழித்துப் பார்த்தபோது
எனது திருவோடு
திருட்டுப் போயிருந்தது.

### பூமியும் சூரியனும்

நானோ,
எப்போதும் உன்னையே
சுற்றிக் கொண்டிருக்கிறேன்.
நீயோ,
என் காதலை மறுத்து
உன் வெப்பக் கிரணங்களால்
என்னைத் தாக்கிக் கொண்டிருக்கிறாயே.

### மரங்கள்

வானத் தந்தையும்
பூமித் தாயும்
சேர்ந்து பெற்றெடுத்த
பச்சைக் குழந்தைகள்.

**வி. உதேஸ்** நாவற்குழி.

கணவர்: எங்கள் இருவருக்கும் நல்ல கலி யாணப் பொருத்தம்!

மனைவி: ஏன் அப்படித் சொல்றீங்க?

கணவர்: நீயும் காதலில் தோல்வி, நானும் காதலில் தோல்வி!

அயல்வீட்டுக்காரர்: ஐயா என்ர வீடு நெருப்புப் பிடிச்சு எரியுது ஒருக்கா வாளியைத் தாங்கோ தண்ணி அள்ளி ஊத்த;

மற்றவர்: என்ர மனிசியைக் கேட்காமல் ஒண்டும் குடுக்கிறதில்ல. இப்ப அவ வீட்டில் இல்லை.

நன்றி - சிரித்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெப்போலியனை வியந்த சிறுவன்!

(பிரான்சு தேசத்துக் குட்டிக்கதை)

ஆங்கிலத்திலிருந்து தமிழில் எழுதியவர்

சு. சிவராசா

பிரான்சு தேசத்தின் தலை நகரம் பாரிஸ். இது நிலப் பிரபுத்துவ காலத்தில் செல்வச் சீமான்களும் சீமாட்டிகளும் கூடிக் குதூகலிக்கும் நகரமாகவும் இருந்தது. இதனால் நவீன நாகரீகம் பிறந்த நகரமென பாரிஸைப் புகழ்வார்கள்.

பிரான்சு தேசத்தின் இணையற்ற வீரனாக விளங்கியவன் நெப்போலியன். பாரிஸ் நகரில் உள்ள ஒரு அழகிய பூங்காவில், குதிரையின் மேல் கம்பீரமாக வீற்றிருக்கும் மாவீரன் நெப்போலியனின் ஒரு சிலை இருக்கிறது. இங்கு வருவோரை தன் வசம் ஈர்க்கும் சக்தியோடு இந்தச் சிலை விளங்குகிறது.

இரண்டாம் உலகப்போர் தொடங்குவதற்கு முற்பட்ட காலத்தில் ஒரு இராணுவ ஜெனரல் இப்பூங்காவிற்குச் சமீபமாக வாழ்ந்து வந்தார். அவர் வெளி ஊர்களில் இராணுவ சேவைக்காக அடிக்கடி சென்று விடுவார். விடுமுறையில் வீட்டில் நிற்கும்போது அவர் உடற் பயிற்சிக்காக காலையில் 'வாக்கிங்' போவார். தமது வீட்டிலிருந்து இந்தப் பூங்கா வரை வந்து திரும்பிச் செல்வது அவருக்குப் பிடித்தமான பயிற்சியாக இருந்தது.

ஒரு சமயம் அவர் விடுமுறையில் வீட்டிற்கு வந்தார். வழமை போல் அதிகாலையில் 'வாக்கிங்' புறப்பட்டார். அவருடைய மகனான எட்டு வயதுச் சிறுவன் தானும் தந்தையோடு 'வாக்கிங்' வருவதாகச் சொன்னான். அவரும் மறுக்காமல் அவனை அழைத்துச் சென்றார்.

தந்தையும் மகனும் பூங்கா வரை நடந்தனர். பின்னர், உள்ளே சென்று நெப்போலியனின் சிலைக்கு அருகே அமைந்திருந்த ஒரு வாங்கில் அமர்ந்து கொண்டனர். சிறுவனின் பார்வை நெப்போலியனின் கம்பீரமான சிலையின் மேல் விழுந்தது. அவன் எழுந்து அந்தச் சிலையின் முன்னால் போய் நின்றான். வெகு நேரமாக ஆர்வமுடன் அதனைப் பார்த்து ரசித்தான். பின்னர் தந்தை மகனை அழைத்துக் கொண்டு வீடு திரும்பினார்.

இவ்வாறே அடுத்து வந்த நாட்களிலும் தந்தையும் மகனும் 'வாக்கிங்' வந்தனர். மகன் நெப்போலியனின் சிலையின் முன்னால் தன்னை மறந்து நின்றான். மகனின் செயலைப் பார்த்து தந்தை பெருமைப்பட்டுக் கொண்டார். அவர் அவனும் தன்னைப் போல் ஒரு பெரிய இராணுவ ஜெனரலாக வரவேண்டும் என விரும்பினார். மாவீரனாகிய நெப்போலியனை தனது மகன் பார்த்துப் பார்த்து பெருமிதங் கொள்வதாக நினைத்தார். நெப்போலியனைப் போல அவனும் வர விரும்புகிறான் என்பதாலேயே இவ்வாறு செய்கிறான் என எண்ணிப் பெருமிதங் கொண்டார்.

ஒரு நாள் நெப்போலியனின் முன்னால் மெய்மறந்து நின்ற சிறுவனிடம் தந்தை கேட்டார்.

''மகனே! இது நெப்போலியன் என்பது உனக்குத் தெரியும். ஒவ்வொரு நாளும் நீ நெப்போலியனைப் பார்க்கும் காரணம் என்ன?''

தந்தையின் கேள்விக்கு மகனிடம் இருந்து சட்டென்று பதில் வந்தது.

''அப்பா! இந்த நெப்போலியன் மிகவும் அழகாக இருக்கிறது. அதைத் தான் ஒவ்வொரு நாளும் பார்த்து ரசிக்கிறேன். அது சரி, நெப்போலியனின் மேல் இருக்கும் அந்த முரட்டு மனிதன் யார்?''

இந்தப் பதிலைக் கேட்ட ஜெனரலுக்கு பெரிய ஏமாற்றமாய்ப் போய் விட்டது. இவ்வளவு நாளும் குதிரையின் அழகை ரசித்த மகனை அழைத்துக் கொண்டு ஜெனரல் வீட்டை நோக்கி நடந்தார். அவரது நடையில் உற்சாகம் கொஞ்சமும் இருக்கவில்லை.

●

---

ஒருவர்:- என்னண்ணே அங்கை ஐ.சி. மட்டும் பார்த்து உள்ளை அனுப்புகினம். 'பொடி' செக்கிங் இல்லையோ?

மற்றவர்:- அது சோதனைச் சாவடியில்லை, ரியூட்டறி!

எஸ். மணிவண்ணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மம் தெரிந்தவர்கள்

- உருவகக்கதை

காய கற்பக் கலையிலே துறைபோன வசந்தருது, கோடையிலே வாடியும் மாரியிலே விறைத்து நடுங்கியும் முதுமைக் குறிபெற்றுப் பொலிவழிந்த இயற்கையை மெல்லென அணைத்துச் சுகஞ்செய்து, வாலைக் குமரியாக்கியது. அந்தக் குமரி, உள்ளங் கிளுகிளுக்கப் பூரித்தாள். எங்கெங்கும் பசுமை படர்ந்தது. மோகன முறுவல் காட்டினாள். எங்கெங்கும் பல்லாயிரம் வண்ண வண்ண மலர்கள் சிரித்தன. தேன் பிலிற்றின; சுகந்தத்தைக் காற்றிலே கலந்து, வெகு நாகரிகமாக, சூசகமாகக் கட்டியங்கூறின. கட்டியத்தின் பொருள் உணர்ந்த தேனீக்கள் மலர்களை நாடின.

இந்த இயற்கையில் ஒருமை புற்று இழைந்து, மலர்ச் சரங்கள் பல தூக்கிச் சிரித்துப் பூரித்து ஒரு மாமரம் நின்றது. அதன் கிளையொன்றிலே தேன்கூடு.

ஆயிரம் ஆயிரம் தேனீக்கள் போவதும், வருவதுமாய்ப் 'பறந்து' திரிந்தன. அந்தப் 'பறப்பு'த்தான் அவற்றின் சுய குணம்; சுயதருமம்.

அந்தத் தேனீக்களிலே ஒரு தேனீயின் 'பறப்பை' ஒரு குயில் நெடுநேரமாக விடுப்புப் பார்த்தது.

''என்ன பறப்பு, என்ன பறப்பு, கணப்பொழுதும் ஓய்வில்லாமல் .., அலுப்புச் சலிப்பில்லாமல் .., ஏன்தான் இப்படி உழைத்து உழைத்து மாய்கிறதோ.''

குயிலின் குரல் வியத்தமாயிற்று. தேனீ அதை லட்சியஞ் செய்யவில்லை; பறப்பாய்ப் பறந்தது.

குயில் பொறுமை இழந்தது. மீண்டும் கூவியது.

''ஓ; சின்னத் தேனீ, சின்னத் தேனீ, கொஞ்சம் நில். ஏன் உனக்கு இந்தப் பறப்பு? ஏன் உனக்கு இத்தனை தீவிரம்? சொல்லிவிட்டுப் போ''.

---

காதலன் :- அன்பே, நம் தேனிலவிற்கு எங்கே போவோம்?

காதலி :- எனது தாத்தாவின் தோட்டத்து மாமரத்தில் தேனீ கூடுகட்டியிருக்கிறது, அங்கே போவோம்.

காதலன் :- ? ? ?

---

கணவன் :- உன்னைக் கட்டினதிலையிருந்து எனக்கு கஸ்ரகாலம் பிடிச்சிட்டுது

மனைவி :- ஏன் அத்தான் என்ன நடந்தது?

கணவன் :- என்னை ஒரு பெட்டையளும் நிமிர்ந்து பாக்குதுகளில்லை.

எஸ். மணிவண்ணன்
பருத்தித்துறை.

---

நீதிபதி :- ஏன்டா .. அந்த வீட்டில் களவெடுத்தாய்..?

கள்ளன் :- ஐயா! கேட்டால் தந்தால்தானே...

நாகமணி மகேந்திரலிங்கம்.

---

மனேச்சர் :- உங்களாலை, எப்படி எல்லாரையும் முந்தி வேலைக்கு வர முடியுது?

தொழிலாளி :- அதுவா, நான் சமைக்கும்போது எனக்கு மனைவி கொஞ்சம் உதவி செய்வா.

வி. உதேஸ் (நாவற்குழி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சின்னத்தேனீ குயிலின் அருகே** பறந்து வந்தது. ஆனால் தாம திக்கவில்லை. இரைந்துவிட்டுச் சென்றது.

''குயிலாரே, குயிலாரே, நிற்க நேரமில்லை, மாலையிலே பேசு வோம்.''

அந்த மாலை நேரமும் வந் தது அந்தத் தேனீயும் ஆனந்தக் களிப்புடன் குயிலின் அருகிற் சென்று ஒரு மாவிலையின் நுனியில் அமர்ந்தது.

''குயிலாரே, குயிலாரே, இனி சொல்லவேண்டியதைச் சொல் லுங்கள்; கேட்கவேண்டியதைக் கேளுங்கள்.''

> ஒருவர்: உங்கட கணவர் தியேட்டரில மூர்ச்சையாகி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகினம்; நீங்க இங்க நிக்கிறீங்க?
>
> ஒருத்தி: ஐயோ என்னை விட்டுட்டு களவாய் படம் பார்க்கப் போயிருக்கிறார்; படுபாவி மனுசன்!
>
> நன்றி: சிரித்திரன்

''சொல்லவேண்டியது ஒன்று மில்லை; கேட்க வேண்டியது தான் ஒன்று உண்டு. ஆமாம் ஒரு கணப்பொழுதேனும் ஓய்வு இல்லாமல் வேலை செய்கி றாயே; அதன் மர்மம் என்ன?''

''அதில் என்ன மர்மம் இருக் கிறது? எவனாலும் ஒரு கணப் பொழுதேனும் உடலாலோ மனத்தாலோ தொழில் செய்யா மல் இருக்க முடியாதே. அந்த முடியாமையால் தொழில் செய் கிறேன்.''

''ஓகோ, இப்படித் தொழில் செய்து கண்ட பயன் என்ன? நீங்கள் சேர்த்துவைத்த தேனை யார் யாரோ கொள்ளை கொண்டு போகிறார்களே கொள்ளை கொடுக்கவா இத் தனை பாடு?''

''உள்ளதைக் கொடுப்பது கொள்ளையா? உள்ளதைச் சேர்த்துவைத்து என்ன செய் வது? உள்ளதை யாருக்கோ எவ்வாறோ பயன்பட வேண் டுமே, அதுதான் போகட்டும்; பயனைப் பற்றிச் சிந்திப்பதற்கு எங்களுக்கு அதிகாரமில்லை. செய்து கொண்டிருப்பதுதான் எங்கள் தருமம்.''

குயில் சிரித்துவிட்டு ''வாழத் தெரியாதவர்கள்; வாழத் தெரி யாதவர்கள்'' என்று கூவியது. தேனீ சிரித்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்களைத் திறவாயோ....

ஊர் கூடியிருந்தது.

ஒப்பாரிச் சத்தம் விட்டு விட்டுக் கேட்க, இடையில் பிள்ளைகள் ஒருவர் மாறி ஒருவராக ''அம்மா! அம்மா! எங்களை விட்டுவிட்டுப் போட்டீங்களா... அம்மா'' என அழும் சத்தம் கூடியிருந்தோர் மனங்களைப் பிசைந்து கண்ணீரைப் பெருக்க வைத்தது.

இரத்தினம் ஓடியாடி அலுவல் பார்த்துக் கொண்டிருந்தான். இறுதிக் கிரியைகளுக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்வதில் அயலவர் பலரும் அவனுக்குக் கைகொடுத்தனர்.

சிவராசா பிரமை பிடித்தவன் மாதிரி இருந்தான். என்ன நடந்தது என்பதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை. ஆடி ஓய்ந்தவளாகக் கிடக்கும் மனைவியை ஏறெடுத்துப் பார்க்க முடியவில்லை. கொலை வெறியோடு அரற்றிக் கொண்டிருக்கும் இளையமகள் நித்திலாவைப் பார்க்கப் பயமாக இருந்தது.

''சிவராசாவை எழுப்பித் தோயவாத்துக் கொண்டு வாருங்கோ, நேரமாகுது!'' என யாரோ குரல் கொடுக்க,

''இரத்தினம் மாமா அவர் அம்மாவுக்கு ஒண்டும் செய்யவேணாம். நான் விடமாட்டன்'' என்று குரலெடுத்து அழுதாள் நித்திலா.

அவளை அடுத்த அறைக்குள் அழைத்துச் சென்று ஆறுதல்படுத்தினர் அங்கிருந்த பெண்கள்.

மூத்தவள் சித்திரா அழுதழுது களைத்துப் போயிருந்தாள். நினைக்க நினைக்கத் தாங்க முடியவில்லை அவளுக்கு. நேற்றுவரை துன்பங்களையும் துயரங்களையுமே சுமந்து வாழ்ந்தவள் அம்மா. அந்த வாழ்விலும் பாசம் என்னும் இன்பத்தை அள்ளிச் சொரிந்தவள், இன்று ஓய்ந்து கிடப்பதைப் பார்க்கமுடியவில்லை. அம்மாவின் நரக வாழ்க்கையை, விட்டத்தை வெறித்தபடி நினைக்கிறாள்.

● ●

சிவராசா ஒழுங்கையால் வரும்போதே யானை பிளிறுவது போன்ற பயங்கரச் சத்தம் கேட்கும். உள்ளே போயிருக்கும் கசிப்பு உலுக்கி எடுக்க அவன் ஆடும் ஆட்டம் அயலட்டையை இரண்டுபடுத்தும். குஞ்சுமணி இரண்டு குமருகளையும், சின்னப்பெடியன்கள் மூவரையும் அழைத்துக்கொண்டு அயல்வீடு எங்காவது ஒளித்திருந்துவிட்டு சிவராசா கத்தி அடங்கி முற்றத்தில் விழுந்து படுத்த பிறகுதான் வருவாள்.

நிரந்தரமான தொழிலில்லை. கூலிவேலைக்குப்போய் சம்பாதிக்கும் காசையும் குடித்துவிட்டு வந்து நிற்பான். மூத்த மகள் சித்திரா இந்த நெருக்கடிக்குள்ளால் க. பொ. த. உயர்தரம் தாண்டிட்டாள். ஏதாவது தொழில்கிடைத்தால் ஒருவாறு குடும்ப வண்டியை ஓட்ட முடியும். வறுமையோடு போராடி அவளால் படிக்கமுடிந்தது. ஆனால் தகப்பனின் அடாவடித்தனத்துக்குள்ளாலே படித்ததுதான் அவளைப் பொறுத்தவரையில் பெரிய சாதனை.

ரியூசன் என்று ரியூட்டறிகள் வாசலை மிதிக்க வசதியற்றுப்போனது பெரிய வாய்ப்பாகப் போய்விட்டது. பாடசாலைக் கல்வியோடு நூல்நிலையங்களுக்குச் சென்று எடுக்கும் குறிப்புக்களும் நல்ல வாசிப்புப் பழக்கமும் அவளை வித்தியாசமான ஒரு மாணவியாக விளங்க வைத்தது. பல்கலைக்கழக அனுமதிக்காகக் காத்திராமல் எப்படியும் ஒரு வேலை இப்போதைக்குத் தேவை.

இரண்டாவது மகள் நித்திலா சாதாரண தரம் படித்துக்கொண்டிருந்தாள். ''அப்பா கெதியில சாகவேணும்'' என்று தன் சிநேகிதிகளிடம் அடிக்கடி கூறிக்கொள்வாள்.

வயிற்றை இறுகக் கட்டிக்கொண்டு படுத்த நாட்கள் அதிகம். விதவிதமாய் உடுப்புப்போட ஆசை; வீதியால் மணியடித்துக்கொண்டு செல்லும் ஐஸ்கிறீமைக் குடிக்க ஆசை; எதுவுமே அவளுக்கு நிறைவேறுவதில்லை. சின்னத்தம்பிகள் மூவரும் விளையாடித் திரியும் காலம்.

இருக்கிற ஒரு வீடுமட்டும் குஞ்சுமணியின் சீதனக் குடிசை என்றபடியால் சுற்றிவர இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ. பவானி



பெயர்ந்தவர்கள் மத்தியில் ஒரு நிரந்தர விலாசமாய் அவர்களுக்குப் பிரச்சனை இல்லாமல் இருந்தது.

சித்திரைக் குயில் ஒன்று பப்பாளி மரத்தில் இருந்து கூவியது. அதன் குரலுக்குப் பதில் கொடுத்துக் கூவிக் கொண்டிருந்தான் கடைசி மகன்.

நிவாரணத்துக்குப் பெறப்பட்ட பொருட்கள் வீட்டில் நிறைந்து கிடந்தன. கொஞ்ச நாளைக்கு அவர்கள் வீட்டில் ஒழுங்காக அடுப்பெரியும்.

இரவு ஆடிய வெறியாட்டம் ஏதுமின்றி சிவராசா எழுந்து வெளியே வந்தான். குஞ்சு மணி வழக்கமான தன் புலம்பலைத் தொடங்கினாள்.

"இண்டைக்காவது குடியாம கூலிக்காசைக் கொண்டுவந்து தந்துபோடு. இஞ்ச பிள்ளையளுக்கு பள்ளிக்கூடத் தேவையளுக்கு காசு வேணும்."

சிவராசா வாய்திறக்கவில்லை. சித்ரா கொண்டுவந்த தேனீரைக் குடித்துவிட்டு சைக்கிளை உருட்டிக்கொண்டு செல்வதைக் கண்டதும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஓமனை கட்டாயம் கொண்டுவந்து தருவார், பார்த்துக்கொண்டிருங்கோ......'' இளையவள் கூறினாள்.

'இவளொரு விறைச்ச மனம் படைத்தவள்' குஞ்சுமணி மனதுள் நினைத்தபடி தூரத்தே செல்லும் கணவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

'நல்லா மெலிஞ்சு போட்டுது...' மனதுள் கழிவிரக்கம் தோன்றியது. அன்றைய வேலைகளைப் பரபரவென முடித்துவிட்டு மாவிடிப்பதற்காகப் புறப்பட்டாள். இந்த வருவாய்தான் அவர்களுக்குத் துணை.

மூத்தவள் சமைத்துக் கொண்டிருந்தாள். ஒன்றை எடுத்தால் ஒன்றில்லாத வறுமை; அப்பாவை நினைக்க அவளுக்கு எரிச்சல் மூண்டது. தினமும் குடிப்பதற்கு எப்படியோ ஏதோ ஒரு வழி இருக்கிறதுதானே!

'பக்கத்துவீட்டு இரத்தினம் மாமாவை கண் முன் நிறுத்திப்பார்க்கிறாள். அவரின் அன்றாடக் கூலி வேலையால் கிடைக்கும் வருவாய்தானே ஆறுபிள்ளைகளுடன் சீவியம் நடத்த உதவுகிறது. இரத்தினம் மாமா மாமியை எவ்வளவு பக்குவமா வைச்சிருக்கிறார். விடிய எழும்பின உடன எவ்வளவு வேலையள் செய்யுறார். பிள்ளைகளை பள்ளிக்கூடம் கொண்டுபோய் விட்டிட்டுத்தான் வேலைக்குப் போவார். அவரின் நோக்கம் எல்லாம் பிள்ளைகளை நல்லாப் படிப்பிக்க வேணும் என்பதுதான். ''என்னைப்போல நீங்க கஸ்ரப்படக்கூடாது, நல்லாப்படிக்கவேணும்'' என்று எவ்வளவு அன்பாகக் கதைப்பார். எங்கட அப்பாவைப்போல முறைப்பதும் திட்டுவதும் இல்லையே.'

நீண்ட பெருமூச்சு கிளம்ப அவள் வெளியே வந்தாள். அவள் சினேகிதியின் தந்தையை இன்று சந்திக்கவேணும். அவரால் ஆரம்பிக்கப்பட உள்ள தொலைத்தொடர்பு நிறுவனத்தில் வேலைபோட்டுத் தருவதாகக் கூறியுள்ளார்.

பாடசாலை விட்டு வந்தவர்களுக்குச் சாப்பாடு கொடுத்துக் கொண்டிருக்கும் போது குஞ்சுமணியும் மாவிடித்துவிட்டு வியர்வையைத் துடைத்தபடி வந்து அமர்ந்தாள்.

'பொறுப்பில்லாத அப்பாவால் தானே அம்மா முட்டு வருத்தத்துடனும் கஸ்ரப்படுகிறா.' மனதுள் எண்ணியபடி

''அம்மா சாப்பிட வாங்கோ'' என்றாள்.

''நான் அங்க சாப்பிட்டன்; நீ சாப்பிடு மோன''!

மாவிடிக்கிற வீடுகளில் கிடைக்கும் போசாக்கான உணவுகள் தான் அவளது வலிமைக்குக் காரணம். மாவிடித்த காசை மகளிடம் கொடுத்தாள்.

''தங்கச்சிக்கு பள்ளிக்கூடத்துக்குத் தேவையிருக்காம், வைச்சுக்குடுபிள்ளை''

வியர்வை நசநசக்கும் உடைகளைக் கழுவி குஞ்சுமணி குளித்துக் கொண்டிருந்தாள். சித்ராவும் வெளியே போய்விட்டாள்.

தூரத்தில் சிவராசா பாடிக்கொண்டு வருவது கேட்டது. அவள் விறுவிறெனக் குளித்து முடித்துவிட்டு உள்ளே வரவும்

''டியேய்'' என்றபடி சிவராசா படலையைத் தள்ளியபடி உள்ளே வந்தான்.

பழையபடி ஆர்ப்பாட்டம் தொடங்கியது. சாப்பாட்டை எடுத்து வைத்தாள் அவள். வாயில் வந்தபடி புலம்பிக்கொண்டே சாப்பிட்டு முடித்தான் அவன்.

''என்ன கறியும் சோறும் சமைச்சிருக்கிறாய் தூ!'' சாப்பாட்டுக்கோப்பை அவள் முதுகைப் பதம்பார்த்தது. குஞ்சுமணி பிள்ளைகளை அழைத்துக்கொண்டு பக்கத்தில் உள்ள கோயில் மணிக்கூண்டுக்குள் அமர்ந்து கொண்டாள்.

நித்திலா கோயில் சன்னிதானத்தில் போய் நின்றாள்.

''இந்த அப்பா எங்களுக்கு வேண்டாம். அப்பா சாகவேணும்; கெதியா... கெதியாச் சாக வேணும்'' என்று வேண்டினாள்.

வேலை கிடைத்துவிட்ட மகிழ்ச்சியுடன் வந்த சித்ரா பின்வழியால் வரும் அம்மாவையும் தம்பி தங்கையையும் கண்டவுடன் வீட்டின் நிலைமை புரிந்தது.

இன்றும் என்றுமே இதே நிலைதானா? ''றோட்டுவழிய சின்னஞ்சிறுசுகள் அநியாயமாக அடிபட்டுச் சாகுதுகள் இது... அப்படியே கை காலோட வீடு வந்து சேர்ந்து விடுகுது'' நித்திலா கூறியபடி புத்தகத்தை எடுத்துக் கொண்டு படிக்கப் போனாள்.

அவள் 'இது' என அஃறிணையில் தான் தகப்பனைக் குறிப்பிடுவாள்.

ஊரெல்லாம் மலிந்து விட்ட கசிப்பு வியாபாரம் மூலை முடுக்கெல்லாம் பரவியது. பெரும்பாலான குடும்பத் தலைவர்களைப் பின்னணியாகக் கொண்டு அவர்களது வாழ்வை நாசம் செய்யத் தொடங்கி விட்டதை எவராலும் தடுக்க முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு வேலை கிடைத்து விட்டதை மெதுவாக அம்மாவுக்குச் சொன்னாள் சித்ரா.

"இனிமேல் அம்மா மாவிடித்துக் கஸ்ரப் படவேண்டாம்; தங்கச்சியையும் ஒரு ரியூசனுக்கு விடலாம்..''

''ஏனக்கா நீங்கள் ரியூசனுக்குப் போயா படிச்சனீங்கள்? நான் வீட்டில இருந்து தான் படிப்பன். நீங்கள் சொல்லித்தாங்கோ.'' நித்திலா அவளின் மடியில் படுத்துக் கொண்டாள்.

சின்னவன் மட்டும் ''நான் கட்டாயம் போவன்; எல்லாரும் தானே போகினம்'' என்றான்.

''ஓம்பிள்ளை இந்த றோட்டில உள்ள எல்லாப் பிள்ளையளும் போகுதுகள்தானே. நீங்களும் போய் படிச்சா நல்லது தான்' பள்ளிக்கூடத்தில படிப்பிக்கிறதை விட வடிவாச் சொல்லிக் குடுக்கிறாங்களாம் எண்டு எல்லாரும் கதைக்கினம்''.

குஞ்சுமணி தான் கண்டு கேட்ட அபிப்பிராயங்களை வெளியிட அவளின் அறியாமையை நினைத்து சித்ரா மனதுள் சிரித்துக்கொண்டாள். இது ஒரு மாயைத் தோற்றமாய் எல்லாரையும் பற்றிவிட்டது. படிக்கிற பிள்ளைக்கு இது அவசியமில்லை என்பதை எப்போ உணரப் போகிறார்கள்?

மறுநாள் தந்தையிடம் தான் வேலைக்குச் செல்ல இருப்பதைத் தெரிவித்தாள். அவன் பற்றில்லாதவன் போல கதைத்து விட்டுச் சைக்கிளை எடுத்துக்கொண்டு கிளம்பினான்.

நாட்கள் நகர்ந்தன.

சித்ரா வேலைக்குப் போய்க்கொண்டிருந்தாள், ஆசைகளைக் குறைத்து தேவைகளைச் சுருக்கி வாழ்வதால் மெல்ல மெல்லப் பற்றாக்குறையற்ற வாழ்வு அங்கு அரும்பத் தொடங்கியது.

ஆனால் வீட்டில் நடக்கும் சிவராசாவின் கூத்தில் எந்தவித மாற்றமும் இருக்கவில்லை.

ஒரு நாள் சித்ரா வேலையால் வந்து அழுது கொண்டிருந்தாள். குஞ்சுமணி திடுக்கிட்டுப் போய் நின்றாள்.

''அக்கா என்ன நடந்தது? சொல்லிப் போட்டு அழுங்கோ'' என்றபடி அருகில் வந்தாள் நித்திலா.

''அவ்வளவு சனமும் இருக்க முதலாளியிட்ட வந்து மகளின் சம்பளத்தில வெட்டுங்கோ என்று ஐந்நூறு ரூபா வாங்கிக் கொண்டு போறார் அப்பா.''

அன்று இரவு பயங்கரச் சண்டை வெடித்தது.

குஞ்சுமணி கணவனை அன்று மிகவும் எதிர்த்துப் பேசினாள். ஒரு குமர்ப்பிள்ளையின் மானத்தை வாங்கிவிட்டதாகக் குழறியழுதாள்.

ஓடியொழிக்காமல் அன்று எல்லோரும் தன்னை எதிர்ப்பது சிவராசாவின் வெறியை அதிகரிக்கச் செய்தது.

அவன் தாறுமாறாகக் கத்தியபடி வீட்டுப் பொருட்களையெல்லாம் எடுத்து வீசினான். குஞ்சுமணியின் தலைமயிரைப் பிடித்தபடி காலால் உதைத்தான்.

பிள்ளைகள் ஐயோ என்று அலறினர். சுவருடன் மோதுப்பட்ட அவளின் தலையில் இருந்து இரத்தம் பெருகியது!

வழக்கமான சத்தம் என அயல் தன்பாட்டில் இருந்து விட்டது.

''ஐயோ அம்மா..'' பிள்ளைகள் கத்தினர். குஞ்சுமணி மயங்கி விழுந்தாள்.

இரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. சித்ரா சீலைத் துணியால் கட்டுப்போட்டாள். இரத்தம் நிற்கவில்லை.

சிவராசா முற்றத்தில் வந்து 'எல்லாரும் தன்னை அடக்கப் பார்ப்பதாக கத்திக் கொண்டிருந்தான். இரவு பத்து மணியாகிவிட்டிருந்தது. வெளியே செல்ல முடியாத ஊரடங்கு நேரம்.

''அம்மா அம்மா... எங்கட அம்மா.. கண்ணைத் திறந்து பாருங்கம்மா....!'' பிள்ளைகள் அலறல் வித்தியாசமாக கேட்கவே அயல் வீட்டவர்கள் கூடினர். குஞ்சுமணியின் மூச்சு நின்று விட்டிருந்தது. அவர்கள் எவ்வளவோ முயற்சித்தும் ஒன்றும் பலனற்றுப் போய்விட்டது.

உள்ளே நடப்பது ஒன்றும் தெரியாமல் சிவராசா கத்திக் கொண்டிருந்தான். □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் நெஞ்சம்...

'சுந்தரன்' எனும் இதழ் கண்டேன்,
மனமகிழ்வு கொண்டேன்.

சிரித்திரனை இழந்து வாழ்ந்த எமக்கு சுந்தரன் வந்தது. இன்பம் அளிக்கிறது. சுந்தரனில் வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர். அட்டைப்பட கார்ட்டூன் மூலம் யதார்த்தத்தைத் தெளிவு படுத்தும் விதம் அருமையிலும் அருமை. ஓவியர் ரமணிக்கு எனது வாழ்த்துக்கள்.

சென்ற இதழில் குறிப்பாக, ''சு.வே'' அவர்கள் எழுதிய ''தரிசனை'' என்ற கதை மிகவும் நன்றாக இருந்தது. கோவிலை விட மனிதனின் உள்ளத்தைத்தான் இறைவன் விரும்புகிறான் என்பதைத் தெளிவுபடுத்தியது. இதுபோன்ற கதைகளைப் பிரசுரிப்பது சுந்தரனை மேலும் வளமாக்கும் என்பது என் எண்ணம்.

மேலும், இளங்கவிஞரின் திறமைகளை வெளிக்கொணரும் முகமாக, அவர்களின் ஆக்கங்களைப் பிரசுரிக்கிறீர்கள். மிக்க நன்றி. ச. முகுந்தன் எழுதிய ''விழித்தெழு'' என்ற கவிதையும், த. ஜெயசீலன் எழுதிய ''தீக்குளிப்பு'' என்ற கவிதையும் நன்றாக இருந்தன. மேலும் மேலும் பல இளங்கவிஞரைப் பிரசவிப்பீர்கள் என நம்புகிறேன்.

வி. உதேஸ்.

நாவற்குழி, கைதடி.

---

ஐயா!

சுந்தரன் இதழ் - 3 கண்டேன். சில ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு சிரித்திரன் இல்லாத குறையை சுந்தரன் நிறைவேற்றுவது கண்டு உளம் மகிழ்கிறேன்.

சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை வாசிக்கக்கூடிய கலை, இலக்கிய, சமூக ஏடு. குறுக்கெழுத்துப் போட்டி ஒன்று நடாத்தினால் சுந்தரன் மென்மேலும் மெருகேறுவான்.

கந்த. ஞானமூர்த்து

கைதடி மேற்கு.

---

இதழ் மூன்று விரிந்தது,
இதயம் மலர்ந்தது,
இனிய அம்சங்கள்
இரசிக்க வைத்தது,
இதமான தென்றலில்
இங்கிதம் எழுந்தது,
இன்பமும் இனிமையும்
சுந்தரன் தந்தது!

நாகமணி மகேந்திரலிங்கம்
தென்கோவை.

---

மதிப்பிற்குரிய ஆசிரியருக்கு!

உங்கள் சுந்தரன் மலர் கண்டு சுகமான ஆனந்தம் கொண்டேன். பேரறிஞர்களின் வழி காட்டலில் பெரும் பங்கைச் செய்துவரும் உங்களைப்பாராட்டாமல் இருக்கமுடியவில்லை. சிறந்த இலக்கிய சமூக மலராக இது மலர என் வாழ்த்துக்கள்.

அன்புடன்
மீனா அருணாசலம்

கிராம்புவில்,
சாவகச்சேரி.

---

சுந்தரன் இரண்டாம் இதழ் படித்தேன். சிறப்பாக உள்ளது.

'வாழ்க்கைப் போர்' கவிதை என்னைக் கவர்ந்தது.

வித்துவான் சி. குமாரசாமி அவர்களைப் பற்றிய மறையாத மனித உறவுகள் வாசித்தேன். வித்துவான் சி.கு. அவர்களிடம் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் யான் சிறிதுகாலம் தமிழ் கற்கும் வாய்ப்புக் கிடைத்தது. கடமை தவறாத ஆசிரியரவர். எண்பதுகளின் இறுதிப் பகுதியில் பிரச்சினை காரணமாக மாணவர் வரவு குறைவாக உள்ள நாட்களில் அவர் எல்லாவகுப்புமாணவர்களையும் ஒன்றாக்கி இராமாயணம், பாரதக் கதைகள் சொல்லுவார். அவரிடம் கதைகளைக் கேட்பதற்காகவே பிரச்சினை நாட்களில் பாடசாலைக்குச் சென்ற மாணவர்களில் நானும் ஒருவன்.

தேவமுகுந்தன்.

விஞ்ஞானபீடம்,
திறந்த பல்கலைக்கழகம்,
நுகேகொடை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாவின்சியின் வாரிசுகள்


சி. கதிர்காமநாதன் - சுளிபுரம்

பத்தடி உயரமான அந்தப் பூவரச மரத்தில் கஷ்டப்பட்டு ஏறி குழைவெட்டும் நேரத்தில் மனைவி என்னைக் கூப்பிட்ட படி அவசரமாக வந்தாள். எனக்கு எரிச்சல் வந்தது. நாற் பத்தைந்து வயதில் மரத்தில் ஏறுவது லேசுப்பட்ட காரியமா? அதுவும் காணிக்குப் புல்லுப் பிடுங்கப்போன "பெண்டுகள்" "உங்குபார், இளம்பெடியள் மாதிரி மரத்தில ஏறி நிற்கிறார்" என தங்களுக்குள் "குசுகுசுத்துப் போனது" மரத்தில் நின்ற அடியேன் காதில் விழுந்து விட்டது. பிறகென்ன அன்று முழுவதும் மரத்திலேயே நிற்கலாம் போன்றிருந்த நேரத்தில் "ரைட்டானிக் கப்பலில்" தண்ணி புகுந்த மாதிரி மனைவி விரைந்து வந்து எதிரே நின்றாள்.

"கெதியாய் இறங்கி வாங்கோப்பா, 'பூனையார்' வந்து நிக்கிறார்."

மனைவியின் அவசரமும் வெறும் "நாலுகால்" பூனைக்கு மரியாதை கொடுத்து வந்துநிற்கிறார் எனச் சொன்னதைக் கேட்டு அணுக்குண்டு வெடித்ததைப் பார்த்த "பாகிஸ்தான்" நிலையில் நான் இருந்தேன்.

சுந்தரன் சிரிகதைப் போட்டி - 3க்கரான பரிசு இதழே உள்ள சிரிகதைக்கு வழங்கப்படுகிறது. இதனை எழுதிய சி. கதிர்காமநாதனுக்கு சுந்தரனின் பாராட்டுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உமக்கென்ன விசரே, உதுக் கேனப்பா உந்த அவசரம்? இரண்டுமாதம் வராத பூனை வந்தால் உடன பிடிச்சு குட்டியளோட்ட விட்டு ஏதாலயும் மூடி விடுறத்துக்கு இங்க வந்து நிக்கிறீர்.'' நான் பெரிதாக ஆத்திரத்துடன் கத்தியபடி மனைவியைப் பார்த்தேன். எமது பிராந்தியத்துள் மறுபடியும் ''அனுக்குண்டு'' வெடிக்கும் ஆபத்தநிலை தெரிந்தது.

''உங்களுக்குத்தான் விசர்' எங்களோட வன்னியிலிருந்த பூனையார் கந்தசாமி வந்து நிக்கிறார் என்று சொல்ல வந்தால் பிடிச்சுக் கட்டிவைக்கச் சொல்லுறியள்''

''அதை முழுசா சொல்ல வேண்டியதுதானே''

நான் முணுமுணுத்தேன். மனைவி வெளியே போய் கந்தசாமியைக் கொண்டு வந்தாள்.

''என்ன வன்னியால வந்து மரத்தில் ஏறி நிக்கிறியள். நானும் கனபேரைப் பாத்திட்டன். பழசை மறந்து போயிடுவினம், நீங்கள் தான் பழசை மறக்காமல் மரத்தில் நிக்கிறியள்.''

வந்ததும் வராததுமாக கந்தசாமி சொன்னது எனக்குப் புகைச்சலைக் கிளப்பியது. நான் அதை வெளிக்காட்டாமல் குழையை வெட்டி முடித்து கீழிறங்கினேன்.

''சரி, கந்தசாமி என்ன விசயம்?''

''எனக்கு பூனைக்குட்டி ஒன்று வேணுமண்ணை. உங்களிட்ட நிக்குது எண்டு கதைச்சினம். வீட்டில ஒரே எலியாய்க் கிடக்குது. ஒரு சாமானும் வைச்செடுக்கேலாது. ஒரு பூனைக்குட்டியை எனக்குத் தாங்கோ. உங்க ஒரு இடத்திலும் பூனைக்குட்டி பிடிக்கிறது கஸ்ரமாய் இருக்குது.''

கந்தசாமி சொல்லிக்கொண்டு போக எனக்கு அப்போது தான் பூனைக்குட்டியின் ''மகத்துவம்'' தெரிந்தது. இடம்பெயர்ந்து வன்னிக்குப் போய் திரும்பி வந்தபோது பூனை, நாய்க்குட்டிகளுக்குப் பெரும் தட்டுப்பாடு இருந்தது. ஏதோ கடவுள்கிருபையால் எங்கோ திரிந்த பூனையொன்று எங்கள் வீட்டோடு ஒட்டி இரண்டு குட்டிகளைப் போட்டு விட்டது.

கந்தசாமி வந்திருப்பதைப் பார்த்தால் இன்னும் நிறையப் பேர் என்னைத்தேடி வருவார்களோ? நல்ல சந்தர்ப்பம். 'அமெரிக்காவின்' நிலையில் நானிருந்தேன்.

''சரி கந்தசாமி உனக்கு என்ன மாதிரியான பூனைக்குட்டி வேணும்?''

கந்தசாமி நிவாரண அரிசியில் இருந்த புழுவைப் பார்க்கும் பார்வையில் என்னைப் பார்த்தான்.

''அண்ணை நான் பூனைக் குட்டி வாங்க வந்தால் ஏதோ பூனைக்குட்டிக்கு சம்மந்தம் பேச வந்தமாதிரி கதைக்கிறியள்:''

''அதில்ல கந்தசாமி, எங்கட பூனை இரண்டு குட்டிதான் போட்டது. ஒரு குட்டிக்கு ''வாலில்லை'' அதாலதான் உன்னைக் கேக்கிறன். உனக்கு வாலுள்ள குட்டி வேணுமோ? வாலில்லாக் குட்டி வேணுமோ? நான் சொல்லியபடி கந்தசாமியைக் கிட்ட நெருங்க அவன் உடன் ஐந்தடி பின்வாங்கினான்.

''அண்ணை என்ன நடந்தது உங்களுக்கு, வன்னியால வந்த பிறகு நல்லா யோசிச்சுப் போட்டியளோ''?

கந்தசாமி ''தமிழ்க்கட்சிகள்'' போல் குழப்பநிலையில் நிற்க மனைவி தேத்தண்ணியுடன் வந்தாள்.

''கந்தசாமி தேத்தண்ணி குடியும்.''

''இங்க கொண்டாங்கோ. ஏனக்கா அண்ணை யோசிக்க விட்டனியள். இப்ப எங்க காட்டி மருந்தெடுக்கிறியள்?'' மனைவிக்கு ஒன்றும் புரியவில்லை. நான் விசயத்தைச் சொன்னேன் அவள் மெல்ல வெளி நடப்பு செய்து விட்டாள்.

''சரியண்ணை என்னமோ உளறுறீங்கள். எனக்கு அந்த வாலில்லாப் பூனைக்குட்டியைத் தாங்கோ எப்ப வந்து பிடிச்சுக் கொண்டுபோக?''

''எப்ப வந்து தன்னும் பிடிச்சுக்கொண்டு போ''

என நான் சொல்ல ரெவி போனில் ''கொழும்பு'' லைன் கிடைத்த சந்தோஷத்தில் கந்தசாமி இருந்தான். அடுத்து குட்டிக்கு இருநூறு ரூபா தர

உலகைக் கட்டியாளும் ஓர் உயர்ந்த அரசனாக இருப்பதைக் காட்டிலும் ஆண்மகனாக ஒரு பெண்ணின் மேன்மையான அன்பு நிறைந்த உள்ளத்தின் சக்கரவர்த்தியாக இருப்பது மேல்.

இங்கர்சால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேணுமென நான் சொல்லி முடிக்க கொழும்பு லைன் கட்டாகிய மாதிரி கந்தசாமி முகம் கோணியது.

''அண்ணை உங்களிட்ட நான் ஆட்டுக்குட்டியே வாங்க வந்தனான். பூனைக்குட்டிதான் வாங்க வந்தனான். நீங்களும் நல்லா பகிடி விடுறியள்.''

''கந்தசாமி பகிடி ஒண்டுமில்ல. நீ கேட்ட பூனைக்குட்டியின்ர விலை அதுதான். நல்லா யோசிச்சு முடிவுசெய், நான் ஆடுகளுக்கு குழையளைக் கட்டிப்போட்டு வாறன்.'

நான் திரும்பிவர மனைவி, கந்தசாமி இருவரும் என்னை எதிர்பார்த்து இருந்தனர்.

''அண்ணை ஊரில இல்லாத புதினமா பூனைக்குட்டிக்கு விலை சொல்லுறியள், உங்களுக்கு உண்மையில என்ன நடந்தது.'?

''உமக்கு சிரிப்பாத்தான் இருக்கும். பூனைச்சனியன் குட்டியளைப்போட்டு வாலில்லாத பூனைக்குட்டி பிறந்திட்டுதே எண்ட வெக்கத்தில் சொல்லாமல் கொள்ளாமல் பதவியை ராஜினாமாச் செய்துபோட்டு போட்டுது. குட்டியளுக்கு பால் வாங்கியே ஞாயமான காசு முடிஞ்சுது.''

''சரியண்ணை கோவியாதயுங்கோ வாலில்லாப் பூனைக் குட்டி இந்த விலையெண்டால், உதுக்கு என்ன காரணம் அண்ணை?'' கந்தசாமி பவ்வியமாகக் கேட்டான். மனைவி நான் என்ன சொல்லப் போகிறேன் என்பதை அறிய ஆவலாக நின்றாள்.

முக்கிய செய்தி சொல்வதற்காக பத்திரிகையாளர்களைக் கூட்டிய 'அமைச்சர்' நிலையில் நானிருந்தேன்.

''கந்தசாமி நீ எத்தனையாம் வகுப்பு படிச்சனீ''?

''நான் ஓ. எல் வரை படிச்சனான் அண்ணை''

''அப்ப நீர் டார்வின் பற்றி அறிந்திருப்பீர்.''

''பரிணாமக் கொள்கையை வகுத்தவர் அவர்தானே.''

''பிறகென்ன அந்த டார்வினுக்கும் என்ர வாலில்லாப் பூனைக்குட்டிக்கும் சம்பந்தமிருக்கு.''

மனைவியும், கந்தசாமியும் என்னை ஆச்சரியமாகப் பார்த்தார்கள்.

''டார்வின் என்ன சொன்னவர் தெரியுமே? உயிரினங்கள் எல்லாத்துக்கும் ஆரம்பத்தில் காது, மூக்கு, வால் எல்லாம் பெரிசாகத்தான் இருந்தது. பிறகு காலப்போக்கில் தேவைக்கேற்ற மாதிரி சின்னதா வந்துட்டுது. அவர் சொன்னதிலிருந்து பார்த்தா எங்கட பூனைக் குட்டிக்கு வாலில்லை. அப்படியென்றால் இந்தப் பூனை லேசுப்பட்ட பூனை அல்ல. இதை இப்ப விஞ்ஞானிகள் அறிந்தால் வாங்கிறத்துக்கு காசைக்கொண்டு ஓடி வந்திடுவாங்கள்'' கந்தசாமியும், மனைவியும் வாக்குறுதியை நம்பும் ''தமிழ்மக்கள்'' போல் பேசாமல் இருந்தனர்.

''அண்ணை நீங்க சொல்றதை என்னால நம்பமுடியவில்லை.'' கந்தசாமி ஆச்சரியப்பட்டு நின்றான். மனைவிக்குப் பெருமை தாங்க முடியவில்லை.

''எங்கயப்பா இதை எல்லாம் படிச்சனீங்கள்''?

வெளியில் பலர் அமளிப்படும் சத்தம் கேட்டது, மனைவி வெளியே ஓடிப்போய் பார்த்துவிட்டு வந்து சொன்னாள்.

''என்னப்பா பூனைக்குட்டி விக்கிறதோ எண்டு ஆக்கள் வந்து நிக்கினம்.''

கந்தசாமி பரபரத்தான்.

''அக்கா ஓடிப்போய் சொல்லுங்கோ பூனைக்குட்டியார் கொடுத்தாச்சு எண்டு''.

மறுபடியும் ஓடிப்போய் ஆக்களை அனுப்பிப் போட்டு வந்தாள்.

''அண்ணை எனக்கு மற்ற வாலுள்ள பூனைக்குட்டியையும் தாங்கோ''.

''கந்தசாமி இரண்டையும் கொண்டு போய் என்ன செய்யப் போறாய்''

''உங்களுக்கேன் அதை? இந்தாங்கோ ஆயிரம் ரூபாய் வைச்சுக் கொள்ளுங்கோ''.

நூறு வலிமை பொருந்திய கரங்களைக் காட்டிலும் ஓர் அறிவுள்ள தலை சிறந்தது.

**One good head is better than hundred strong hands.**

**- THOMAS FULLER -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனேயே கந்தசாமி இரண்டு பூனைக்குட்டியளையும் வாங்கிக் கொண்டு போய் விட்டான். நான் மனைவியை பெருமிதத் துடன் பார்த்தேன்.

''என்ன பார்த்திரே, வர் லுள்ள பூனைக்குட்டியோட, யாரும் வாங்காத வாலில்லாத பூனைக்குட்டியையும் சேர்த்து தலையில கட்டிட்டேன்.''

''எப்படியப்பா, உங்களுக்கு இப்படி ஐடியர வந்தது?''

இரவு கனவில் டார்வின் வந்து என்னை வாழ்த்திவிட்டுப் போனார்.

''என்னுடைய அடுத்த வாரிசு நீ தானடா தம்பி''

எனக்கு உடம்பு புல்லரித்தது.

மறுநாள் மனைவி பேப்பரை என்முன் போட்டு, ''பேப்பரைப் பாருங்கோவன்'' என்று கில்லாரி, கிளிங்டனைப் பார்த்துச் சொன்னது போல் சொன்னாள். பேப்பரை விரித் துப் பார்த்தேன். தொடர்பற்ற செய்மதிபோல் தலை சுற்றியது.

## காணத்தவறாதீர்கள்

இந்த வருடத்தின் இணையற்ற அதிசயம்

அன்று 'டார்வின்' கூறியது இன்று நிஜமாகிவிட்டது.

நிஜ 'வாலில்லாப் பூனைக்குட்டியை' காணவாருங்கள்!

இடம்: கந்தசாமி, டச் றோட், தொல்புரம்.

பார்வையிடும் நேரம்; காலை 8.00 – 4.00 மணி வரை

அன்பளிப்பு: பெரியவர்கள் 10/- சிறியவர்கள் 5/-

பூனை சம்பந்தமான

இலவச வீடியோ படக்காட்சியும் உண்டு

அனைவரும் வருக! வருக!

ஓஷோவின் ஞானக்கதைகள்

## பொக்கிஷம்

'பாலைவனத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு காலையில் சென்று தூரத்தில் உள்ள ஒரு மலையைப் பார்த்துக் கொண்டு நின்றால் கீழே விழும் அவனது நிழலுக்கு அடியில் ஒரு பெரிய பொக்கிஷம் உள்ளது' என்று ஒருவன் கேள்விப்பட்டான்.

உடனே அவன் காலையில் குறிப்பிட்ட இடத்தை அடைந்தான்.

மணலின் மீது அவனது நிழல் நீண்டு மெல்லியதாக விழுந்தது.

பொக்கிஷத்தைப் பெற அவன் மணலைத் தோண்ட ஆரம்பித்தான்.

அவன் தோண்டத் தோண்ட சூரியன் மெலெழுந்து கொண்டிருந்தது.

அவனது நிழல் சுருங்கிக் கொண்டே இருந்தது. அவன் தோண்டிக் கொண்டே இருந்தான்.

நண்பகலில் அவன் நிழல் அவன் காலடிக்குள் நுழைந்து கொண்டது.

நிழலே இல்லை.

அவன் ஏமாற்றத்தால் அழுது புலம் பினான்.

அப்போது அவ்வழியே வந்த ஒரு பெரியவர் அவனது செயல் கண்டு சிரித் தார்.

அவன் அவரைப் பார்த்தான்.

அவர் கூறினார்;

''இப்போதுதான் உன் நிழல் பொக் கிஷம் இருக்கும் சரியான இடத்தைக் காண பிக்கிறது. அது உனக்குள்ளே இருக்கிறது',

நாம் அதிகமாக நேசிப்பவர்களைப் பிரிந்திருத்தல் மரணத்தைவிடக் கொடியதாகும்.

**Absence from whom we love is worse than death.**

- WILLIAM COWPER -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தட்டுங்கள்...
# திறக்கப்படும்?!



நர்க்மணி மகேந்திரலிங்கம்
தென் கோப்பாய்.

? உலகில் விஞ்ஞானத்தின் பெருமைகள் பெருகிக் கொண்டிருக்கும் காலகட்டத்தில் இலங்கையின் சாதனை என்ன?

☼ புதைகுழிகள் பெருகிக் கொண்டிருக்கின்றனவே.

☼

ஞா. கிருபதீசன்,
கைதடி மேற்கு.

? அடக்கப்பட்டு ஒடுக்கப்படும் மக்களின் மனோநிலை பாதிக்கப்படும் என்பது உண்மையா?

☼ நிச்சயமாகப் பாதிக்கப்படும்; அடக்கி ஒடுக்குபவர்கள் அவலப்படும் அளவிற்கு.

☼

வி. உதேஸ்,
நாவற்குழி கைதடி,

? நாம், நமது கலாச்சாரம், பண்பாடுகளை ஒதுக்கித்தள்ளி வேற்று நாட்டுக் கலாச்சாரத்தில் ஈடுபாடு கொள்வோமானால் அது நமக்கு இழுக்கைத்தராதா?

☼ மனித நேயத்தை எமது கலாச்சாரமும் பண்பாடும் வளர்க்கத் தவறுமாயின் அத்தகைய கலாச்சாரத்தை ஒதுக்கிவிட வேண்டியது அவசியம். வேற்று நாட்டுக் கலாச்சாரம் அதனைத் தருமாயின் மகிழ்ச்சியோடு அதனைக் கடைப்பிடிப்பதும் மிக அவசியம்.

☼

க. பகீரதன் - கொழும்புத்துறை;

? 3-வது இதழின் பின்பக்க அட்டையில் குகன் ஸ்ரோர் விளம்பரம் எமதுஇந்துமதத்தை இழிவுபடுத்துவதுபோல் அமைந்துள்ளது. சமூகஏடான சுந்தரனே இப்படிச் செய்யலாமா?

☼ இந்துமதம் இன்றுஓங்கிவளர்ந்துஅந்நியதேசமெல்லாம் வியாபித்திருக்கிறது என்றால், அது ஒரு குறிப்பிட்ட மக்களுக்கோ இடத்திற்கோ செயலுக்கோ என்றில்லாமல், எல்லாம் தானாக, தானே எல்லாமாக என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதேயாகும். இறைவனை எல்லாநிலையிலும் காணும் சமயம் இந்துசமயம்: காதலன், காதலி, தூதுவன், ஏன் வேலைக்காரனாகக் கூட கடவுளைக் காணும் மரபானது இந்து சமயம். ஒருபிடி பிட்டுக்கு மண்சுமந்தான் சிவன் என்பதனை ஏற்றுக்கொள்ளும் நீர், மளிகைப் பொருள்களுக்காக ''குகன் ஸ்ரோர்''ருக்கு சிவன் வந்திருக்க முடியாதா? பாகுபாடு - மனத்தில்தான்; சமயத்திலல்ல. சமயத்தில் பற்று வேண்டும்தான்.

☼

தேவமுகுந்தன், விஞ்ஞானபீடம்,
இலங்கை திறந்தவெளிப் பல்கலைக்கழகம்.

? பாடசாலை ஆசிரியர், தனியார் கல்வி நிலைய ஆசிரியர் – இவர்களை ஒப்பிடுங்கள் பார்க்கலாம்.

☼ ஒருவர் போசாக்குள்ள உணவு மூலம் மாணவருக்கு தைரியம் வளர்ப்பவர்; மற்றவர் ஊசி மருந்து மூலம் விட்டமின்களை மாணவருக்குள் செலுத்தி தைரியம் கொடுப்பவர். (உடனடி நிவாரணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உயிர் விலங்கு!

கவிதை

- சஞ்சயன் -

அன்பு மகனே!
வேனிற் காலத்தில்
விம்மிப்புடைத்த - என்
தளிர்க்கனிகள்
தளர்ந்து வாடி
நிலம் நோக்கி
நீழும்வரை;

சேலைமுடிச்சுள் - நான்
சேமித்து வைத்திருந்த
சில்லறை வியர்வைகள்
சிதறிப் போகும்வரை;

நான்
இறுக்கிச்சுருக்கிய - என்
இரைப்பையை - விழுங்கி
வளர்ந்த
வயல்களும் நிலங்களும் - என்
விரலடையாளத்தோடு
விலகிப் போகும் வரை;

முகங்களை மாற்றி மாற்றி
சிரித்த உதடுகள்
இன்று இல்லை!
இல்லவே இல்லை!
உருமாறி
கருங்கற்பாறை போல் என்முகமும்
அந்த மனங்களும்.

அன்பு மகனே!
ஒரு நிமிஷத்துளிக்குள் - என்
உயிரின் ஒடுக்கம்,
நின்று தவிக்கிறது!
செப்புக்காசினதும்
செம்மண் துகள்களினதும்
கரைசல்கள்
தொண்டை வழியே - என்
உயிரை தொடுவதற்காகவல்ல;

அன்பு மகனே!
உன்
நிஜப்புன்னகையின்
மின்னல்பட்டு - என்
உயிர்விலங்கு
உடைந்து போவதற்காக!

)))

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புகைப்படத்துறையில்
பல்லாண்டு கால
அனுபவமுள்ள
பலாலி வீதி, கந்தர்மடம்
**பேபி போட்டோ**
ஸ்தாபனத்தினர்
கற்பனைத் திறனும்
கலைநுட்பமும் கொண்ட
புகைப்படங்களை
எடுப்பதில் மிகவல்லவர்கள்.
அவர்களது புகைப்படங்கள்
ஒவ்வொன்றும்
ஒவ்வொரு கவிதையே.
அவர்கள் எதுவித
எதிர்பார்ப்புமின்றி
இலவசமாக
கவிதைகளுக்குரிய படங்களை
தந்துதவியுள்ளார்கள்.
அவர்களுக்கு
சுந்தரனின் நன்றிகள்.

## கவிதைப் போட்டி - 1

இப்படத்தினைக் காணும்போது
உங்கள் மனதிலே தோன்றும்
எண்ணத்தினை கவிதையாகத்
தாருங்கள்.
சிறந்த கவிதையொன்றிற்கு
100/- பரிசு காத்திருக்கிறது.
கவிதை சுந்தரனின் ஒரு பக்கத்துக்குள்
அடங்கக் கூடியதாக எழுதவும்.

நீதிபதி : நீ உன் மனைவியை வேண்டு
மென்றா வெட்டினாய்?

குற்றவாளி : இல்லை ஐயா ....
வேண்டாம் என்றுதான்
வெட்டினேன்.

— நாகமணி மகேந்திரலிங்கம்

☼

மனைவி : பிள்ளைக்கு பால்மா வாங்க
காசில்லை.

கணவன் : பைத்தியகாரி நான் குடிச்சிட்டு
போட்ட வெற்றுப் போத்தல்
எல்லாத்தையும் வித்துப்
போட்டு பால்மா வேண்டு!

— சிரித்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துன்பத்தீயடி சகியே...

உன்னைப் பார்த்த நாள் முதலாய்
நான் இழந்தேன் தூக்கத்தை
ஒன்றாயிருந்து பேசவில்லை! - என்
உள்ளம் தன்னை உரைக்கவில்லை!
நின்று உன்னை ரசித்ததில்லை!
நனவில் கனவில் நனைந்ததில்லை!
என்னபிணைப்போ இஃதறியேன் - காலம்
போட்ட இணைப்போ யானறியேன்!
சொன்ன மொழியில் பிசகில்லை - இன்பச்
சோதனைக் காலம் முடியவில்லை.
உன்னை நாடிட யார் வைத்தார்
என்னை நானே இழந்துவிட்டேன் - உன்னில்
என்னைத்தேடி அலைகின்றேன்
உந்தன்பதி லென்உயிர்க்குஞ்சை
வளர்த்துக் காக்கும் தாய்போலே
துன்பத்தீயில் துவள்கின்றேன் - உன்
தொடர்பு வந்தால்தான் குளிராவேன்!

– க. சத்தியமாலா

ஓஷோவின் ஞானக்கதைகள்

## வாழ்வுக்கான சந்தர்ப்பம்

ஒரு வியாபாரி பகல் உணவுக்காக ஒரு விடுதியை நோக்கிச் சென்றான். எதிரே வந்த ஒருவன் அவனை நிறுத்தினான்.

''என்னை உங்களுக்கு நினைவிருக்குமா என்று தெரிய வில்லை. சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன் இந்த நகரத்திற்கு நான் வந்தேன். அப்பொழுது உங்களிடம் கொஞ்சம் பணம் கேட்டேன். நீங்கள் இருபது டாலர்கள் கொடுத்து உதவினீர்கள். அப்பொழுது நீங்கள் 'ஒரு மனிதனை வெற்றிப் பாதையில் செல்ல இது வழிவகுக் கட்டும்' என்று வாழ்த்திக் கொடுத்தீர்கள்'' என்று சொன்னான்.

அந்த வியாபாரி சிறிது யோசித்துவிட்டு,

''ஆமாம், எனக்கு ஞாபகம் வந்துவிட்டது. அப்புறம் சொல்லுங்கள்'' என்று ஆவலுடன் கேட்டான்.

அதற்கு அவன் ''நல்லது, இப்பொழுதும் அதைப் போல ஒரு சந்தர்ப்பம் எனக்குக் கொடுக்க விரும்புகிறீர்களா?'' என்றான்.

ஒருவன்: அதோ போறாரே அவரோட பிறந்தநாளென்று உலகமே கொண்டாடும்.

மற்றவர்: அவ்வளவு பெரிய ஆளா?

ஒருவன்: இல்லை அண்டைக்குத் தான் தீபாவளி.

☼

கமலா: என்னைக் கேட்டுத்தான் எங்கட வாத்தியார் அடுத்த பாடத்திற்கே போவார்.

விமலா: ஏன் உன்மேல் அவ்வளவு பிரியமா?

கமலா: இல்லை, எனக்கு புரிந்திட்டா. எல்லாருக்கும் புரிஞ்சிடும் என்று ஒரு நம்பிக்கை தான்.

கரவைத்தனு
'தாய் இல்லம்'
கரவெட்டி மத்தி.

மக்கள் தம் நிலைக்குச் சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் காரணம் காட்டுகிறார்கள். சந்தர்ப்பங்களை நான் நம்புவதில்லை. உலகில் வெற்றி பெறும் பெரும்பாலான மக்கள் சந்தர்ப்பங்களை தேடுகிறார்கள். அவை கிடைக்கவில்லை என்றால் அவர்கள் அவற்றை உருவாக்குகிறார்கள்.

People are always blaming their Circustances for what they are. I dont belief in Circumstances. The people who get on in this world are the people who getup and look for the Circumstances they want and if they can't find them, Make them.

**- George Bernard Shaw**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனயனின் சிரிப்பும் தாயின் பகிடியும்

### - மறையாத மனித உறவுகள் -

- ஷண்

சிரித்து வாழ்ந்தவர் சி. கு. அவர் பிறர் பார்த்தும் சிரிக்க வாழாதவர். நாவினால் சுடாமல் நாவடக்கமாகவும், வாழ்ந்தவர். ஆவலோடு நண்பர்கள், உற்றார், ஊரவரின் உளத்து ஒடுக்கமாகவும் இருந்தவர் சிறுபிள்ளைத்தனமில்லாமல் குழந்தைத்தன்மையோடு என்னாளும் எப்போதும் புன்னகையைத் தன்னகையாகக் கொண்டு இலக்கியத்தில் புழுருக்கதைகளைச் சொல்லிச் சொல்லிப் பூரிப்பார். நல்ல கறுத்த உருவம், வெண்மையான பற்கள், தன்மையான போக்கு, உண்மையான விசுவாசம். ''என்ன எதற்கெடுத்தாலும் சிரிக்கிறீர்களே'' என்று யாரும் கேட்டால் 'நான் சிரித்தால் கருங்கல்லில் காகம் பீச்சின மாதிரி இருக்கும் யார் அதைப்பார்த்து ரசிப்பார்கள்' என்று கூறுவார். இடையிடையே இலக்கிய மாந்தர்களின் சிரிப்பால் ஏற்பட்ட விபரீதங்களைச் சொல்லிச் சொல்லிச் சிரிப்பார். திரௌபதையின் சிரிப்பு அவருக்குப் பிடித்தமானது. 'இடுக்கண் வருங்கால் நகுக' என்று மற்றவர்கள் துன்பத்துள் துவழாமல் புத்தியும் கூறுவார்.

அவருடைய தாயாரின் நகைச்சுவையில் திழைக்காதவர்களே இல்லை. ஒருமுறை தாயார் இரவு படுக்கையிலிருந்து இயற்கைக்கடன்கழிப்பதற்கு கைவிளக்குடன் (லாம்பு) வீட்டின் உயரமான படிக்கட்டிலிருந்து கீழே இறங்கும் போது முற்றத்துச் சீமெந்து நிலத்தில் விழுந்துவிட்டா. சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்து வித்துவான் ஓடிப்போய்ப் பார்த்தபோது இலாம்பை உயர்த்தியபடி தாயார் நிலத்திலே கிடந்தார். 'என்னணை ஆச்சி எங்கேயாவது நோக்கி இருக்குதா' என்று கேட்டு அவவைத் தூக்கப் போனார். அதற்குத்தாயார் 'எடா தம்பி முட்டுக்காய் விழுந்தால் தான்ரா உடையும். இது செத்தல் தேங்காய்தானே. உடையாது' என்று சொல்லித் தானும் சிரித்து எல்லோரையும் சிரிக்க வைத்தா.

எல்லாச் சுவைகளிலும் பார்க்க நகைச்சுவைக்கு ஈடும் இணையும் இல்லை. தற்காலத்தில் நகைச்சுவைக்குப் பதிலாக 'நகைச்சுவை' (ஆபரணச்சுவை) யால் எங்கெங்கு பார்க்கினும் மின்னுகிறார்கள். இவை அசலா, நகலா என்று பிறர் சிரிக்கப் பெரிதுவக்கின்றார்கள். புன்னகையும் 'கல்வி அழகுமே' வித்துவானுக்குத் தன் அழகாவும் தண் அழகாகவும் இருந்தது.

'பொம்பிளை சிரிச்சார்ப் போச்சு' என்று சிலேடையாகவும் அவர் சொல்வதுண்டு. இது என்ன சிரிப்பு? ..... ...

## புதையுண்டவள் நான்!

- சஞ்சயன் -

என்
மென்மையான ஆசைகளெல்லாம்
பலாத்காரத்துள்
பலியாகிவிட்டது.

நரம்பு மண்டலத்தின்
இழையங்கள்
இரும்புக்கம்பிகளால்
சிதறிப்போயின!

என்
அந்தரங்கங்களெல்லாம்
பற்றை மறைவுக்குள் பரிதாபமாய்
செத்துப்போயின!

என்
மெல்லிய மௌனங்கள்
பிரமாண்ட குரலெடுத்து
ஓ... ஓ... என்று
ஓங்காரமாய் ஒலித்தது.

இந்தப் பிரபஞ்சத்தின்
செவிப்பறையை
மலடாக்கிவிட்டதுபோலும்;

எல்லாம்
நான் செய்த குற்றம்:
ஒரு தாயின் அங்கங்கள்
என்னிடமும் இருந்ததுதான்.

இந்த மண்ணில்
உதிரம் ஊற்றி
தசைகளாலும்
எலும்புகளாலும்
புதையுண்டார்கள்.

நான்
என் இறுதிக்கணத்தின்
அவலங்களோடு
புதைந்துள்ளேன்.

மீண்டும்
முளைப்பதற்காகவல்ல;
எரிமலையெனக் குமுறி
எழுவதற்காய்!
எல்லாவற்றையும்
எரித்துவிடுவதற்காய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கட்டுரை

# வாழ நினைத்தால்....

மக்கள் தாம் முன்னேற முடியாமைக்கு பல காரணங்களைக் காட்டுகிறார்கள். தமது சந்தர்ப்பம் சூழ்நிலைகள் சரியாக அமையுதில்லை; எல்லாம் எனது சாதகபலன், விதி, என்று சலித்துக் கொள்கிறார்கள். எல்லாவற்றிற்கும் பணம் வேண்டும், வறுமையில் பிறந்துவிட்டேன. வசதியில்லை; வாழமுடியவில்லை; என்று வேதனைப்படுகிறார்கள். ஒருவன் முன்னேற்றமடையாமைக்கு முக்கிய காரணமே தன்னம்பிக்கையின்மையே. ஒருவன் கடைசியாக இழக்கும் சொத்து தன்னம்பிக்கையே. ஒருவன் தனது வாழ்வை நல்முறையில் அமைத்துக் கொள்வதற்கேற்ப, சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லையானால்; அவன் அவற்றை ஆக்கிக் கொள்ள வேண்டும். பெரும்பாலானவர்கள் தம் வாழ்வை வறுமை பாழாக்கி விடுகிறது; முன்னேற அடிப்படை வசதிகள் இல்லை என்று அலுத்துக் கொள்வதை நாம் அவதானிக்கலாம்.

உண்மை தான். 'கொடிது கொடிது வறுமை கொடிது; இளமையில் வறுமை மிகக்கொடியது. பணமில்லாவிடில் எதுவும் சாத்தியம் இல்லை. வாழ்வே சோக மயம் – துன்பமயம் – உலகத்தில் சபிக்கப்பட்டவன் ஏழை – இப்படித்தானே நீங்கள் எண்ணுகிறீர்கள். இதோ உலகில் வறுமையால் வாடியவர்கள் செய்த சாதனைகளைப் பாருங்கள். அந்த நிலைமையிலிருந்து அவர்கள் மீண்டு; ஒளிமயமான வாழ்வினைப் பெற்ற பலநூறு பேர் உள்ளார்கள். அவர்களில் சிலர்:

உலகமகாயுத்தத்தில் மேற்கு அரங்கத்திலுள்ள தரைப்படை, கடற்படை விமானப்படை ஆகிய எல்லாப்படைகளுக்கும் தளபதியாகி நேர்நடத்திச் சென்ற மாவீரன் என்று போற்றப்பட்ட 'ஐஸன்ஹோவர்' ஒரு காலத்தில் மாடுகளை மேய்த்தும் - பாத்திரங்கள் கழுவியும் தன்வயிற்றைக் கழுவியவர் - இது வரை உலக சரித்திரத்தில் இத்துணைப் பெரும் படை இப்படி ஒருவரின் கையில் ஒப்படைக்கப்பட்டதே இல்லை.

பாஸ்டன் நகரில் றெயில் பெட்டிகளில் பத்திரிகை வியாபாரம் செய்த ஒரு ஏழையை அறிவீர்களா? இன்று மின்சார விளக்கையும் விசிறிகளையும் ஏன் திரைப்படங்களையும் நாம் கண்டு களிக்கின்றோம் என்றால் அன்று இருள் சூழ்ந்த றெயில் பெட்டிக்குள் ஒதுங்க இடமே இல்லாமல் நல்ல உணவில்லாமல் உடையில்லாமல் வாழ்வு முழுதுமே ஆராய்ச்சிக்குள் அமுக்கிய அந்த வறுமை கொண்ட ''எடிஸன்'' என்பவனால் தான்.

தெருத்தெருவாக மாடுகளின் எலும்புகளை பொறுக்கி உரக்கம்பனிகளுக்கு விற்று வயிறு வளர்த்த ஏழைச் சகோதரர்களை அறிவீர்களா? - பின்பு அவர்கள்தான் விமானத்தைக் கண்டுபிடித்த ரைட் சகோதரர்கள்.

கடுங்குளிரில் போர்த்துக் கொள்ள போர்வையேயில்லாமல் கதிரைகளுக்குக் கீழ் முடங்கிக் கொண்டு தூங்கிய வீட்டு வேலைக்காரி ஒருத்தியை அறிவீர்களா? - கல்வி கற்கும்போது பசி தாங்கமுடியாமல் மயங்கி விழுந்த அந்த இளம் பெண்ணுக்கு **1903** இலும் **1911** இலும் உலகின் அதிசிறந்த பரிசான நோபல் பரிசு கிடைத்தது.

வறுமையோடு போராடி உலகை வென்ற அந்த அம்மையார் யார் தெரியுமா? அவர் தான் புற்றுநோயைக் குணப்படுத்தக்கூடிய றேடியத்தைக் கண்டுபிடித்த க்யூரி அம்மையார்.

சமதர்மக் கொள்கையை உலகிற்கு அளித்த சிந்தனைவாதி கார்ல்மாக்ஸ் வறுமையால் துன்பத்தின் எல்லைக்குச் சென்றவர் - ரஷ்யாவின் அரசியலையே திசை திருப்பினார் – ரஷ்யாவின் சிந்தனைச்சிற்பி துருக்கியரின் தந்தை கமால் பாஷா கடற்கரையில் கூலி வேலை செய்த தொழிலாளி ஒருவருடைய மகன்.

அமெரிக்காவை சுதந்திர நாடாகச் செய்த ஜோர்ச் வாஷிங்டன் ஓர் ஏழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாத ஓர் ஏழை விறகு வெட்டியின் மகன் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டார். அது மட்டுமல்ல அமெரிக்காவில் புரையோடிக் கிடந்த அடிமை வாணிபத்தை அடியோடு அழித்தவர். உள்நாட்டுக் குழப்பத்தை அடக்கி அமெரிக்கா முழுவதையும் ஓர் அமைப்புக்குள் கொண்டு வந்த பெரும் தீரன்; வறுமையின் உச்சத்திற்கே சென்றவர். மண் வெட்டியில் எழுதிப் படித்தவர் - அடுப்பு வெளிச்சத்தில் கற்றவர் - புத்தகங்களை பல மைல் நடந்து சென்று இரவல் பெற்று கல்வி பயின்று முன்னேறியவர் எப்ரகாம் லிங்கன்.

அமெரிக்காவின் அதிபராகி உலகை உய்விக்க வந்தவர் என்று போற்றப்பட்ட உட்ரோ வில்ஸன் ஓர் ஏழை ஆசிரியர். உடைகள் வாங்கக்கூட பணமில்லாமல் இளம் வயதில் தவித்தவர். தானும் தன் மனைவியுமாக படங்கள் கீறிவிற்று வயிறு வளர்த்தவர்.

மோட்டார் காரைக் கண்டுபிடித்த கோடீஸ்வரர் ஹென்றி ஃபோர்ட் ஓர் ஏழை உழவனின் மகன்.


குழந்தைப்பருவத்தில் அரைவயிற்றுக்கும் உணவில்லாது ஓலைக்குடிசையில் பிறந்த கோடிச்செல்வர், உலக கொடை வள்ளல் ராக்பெல்லர் முதுமைப் பருவத்தில் முப்பதுகோடி பவுண்களுக்கு அதிபதியானார். பதினைந்து கோடி பவுண்களுக்குமேல் அறம் செய்தார். பிழைக்கத் தெரியாதவன் என்று அவரது காதலியினால் தூக்கி எறியப்பட்ட ராக்பெல்லர் கிழங்குகளை வெயிலில் காயவைப்பதற்கு 2பென்ஸ் கூலி பெற்றவர்- இன்று இறந்தபின்பும் ஒருநாள் 30,000 பவுண் வீதம் அவரது செல்வம் வளர்ந்து கொண்டே இருக்கிறது. ராக்பெல்லர் தமது ஆயுட்காலத்தில் செய்த தர்மமும் மிகப் பெரியது. பலகோடி பவுண்களை தர்மத்திற்காக அள்ளிக் கொடுத்த வள்ளல். (இன்று நமது வர்த்தகர்கள் தமது ஏழேழு பிறப்புகளுக்கும் செல்வம் சேர்க்கிறார்கள்).

ரஷ்யாவை உலகில் ஒரு நாடாகத் தலை நிமிர்த்திவிட்டவன்-பலகோடிமக்களைஅடிமைத் தளையிலிருந்து விடுவித்தவன் - பலகோடி ஏழைகளுக்கு வாழ்வு கொடுத்தவன். உலகின் ஆறில் ஒரு பகுதியை ஆண்டவன் - இருபது கோடி மக்களின் தலைஎழுத்தை தன்கையால் எழுதியவன்தான் ஒரு செருப்புத்தைக்கும் அடிமை தொழிலாளி ஒருவனின் மகன்-ஜோசேப் ஸ்டாலின்.

ஒரு முறை பிரிட்டன் மக்கள் தலை நிமிர்ந்து குரலிட்டனர். நாம் இந்தியாவை இழப்பதற்குத் தயாராகவுள்ளோம். ஆனால் ஷேக்ஸ்பியரின் காவியங்களை இழக்கமாட்டோம் என்று. அந்த ஷேக்ஸ்பியர் ஒரு காலத்தில் எழுதுவதற்கு பேப்பர் வாங்கக் காசில்லாமல் தெருக்களில் கிடந்த குப்பைப் பேப்பர்களைப் பொறுக்கி அதில் தன் காவியங்களை எழுதியவன்.

இந்த உலகத்தில் நம்பிக்கையும், திடமும், தொடர்ந்து செல்லும் உறுதியுமே, வெற்றிக்கு வழிவகுக்கும். வறுமை எல்லாம் அவர்களது முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கவில்லை.


---



காதலி : ஓடிப்போவம் ஓடிப்போவம் என்கிறீர்; என்ன வருமானம் இருக்குது?

காதலன் : ஏன் நிவாரணம் இருக்குத்தானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



□ உதென்ன பேப்பர் உந்தக் கோலத்தில வந்திருக்கு?

□ தணிக்கை செய்த பேப்பராம்!

## மண்ணின் நிஜம் மழலை

தேனின் சுவையால் ஊறுமே நீர் - உன்
முகம் பார்த்தால் போதுமே
ஊற்றெடுக்கும் தேன்.
தென்றல் மேனியைத் தொடும் சுகமென்ன!
உன் பசுந்தளிர் கைபட்டால் எழுமே சுகந்தம்!
அலைகள் வந்து, வந்து சேரும் அழகை - உன்
சிரிப்பே போதுமே அதை உணர்த்த!
ஏழு ராகமும் உன் சிரிப்பில் அடங்குமே
எட்டாவது தானே உன் ஆ......ஊ ....
உன் சிரிப்பின் ஓசை தானே - நாம் அறிந்த
இறைவனின் திசை.

அ. உதயகுமார் - நல்லூர்



வயோதிபர் : டொக்டர்; ராத்திரி மூடின கண்தான், இன்னும் திறக்குதே இல்லை!

டொக்டர் : ?

வயோதிபர் : ராத்திரி இப்பத்தே சினிமாப் படம் ஒண்டு பார்த்தன் அப்ப மூடின கண்தான்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— சாரங்கா... சாரங்கா... சாரங்கா... சாரங்கா...

ஒருவர் : என்ன மகள் கனவில புலம்புறா;
ஏதன் காதல் கீதலோ?

தகப்பன் : ச்சே ... அது சாரங்கா நகை மாடத்தை
கனவு கண்டு கொண்டிருக்கிறாள்.
நாளைக்கு கூட்டிப்போகாட்டி பைத்தியமே பிடிச்சுடும்.



# சாரங்கா நகைமாடம்



177/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



★

அருள் முருகன் நகை அகம்
96, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சிவா நகைமாடம்
யாழ் வீதி,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணைப் பறிக்கிறது
என்னை இழுக்கிறது
வண்ணம் நூறு விதமோ
விண்ணோடும் மண்ணோடும்
இல்லாத வண்ணங்கள்
பட்டோடும் நூலோடும்
அளிக்கிறது



**மகாநதி** புடவை அகம்

முகூர்த்தப் பட்டுப் புடவைகளுக்கு
அதிர்ஷ்டமான இடம்

4, நவீன சந்தை,
சாவகச்சேரி.

16, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

**MAHANATHY TEX**

*The Ultimate Destination for Sarees*

4, New Market,
CHAVAKACHCHERI.

16, New Market,
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org